# 'அரசியல் சட்டத்துக்கு எதிரான கிளர்ச்சியில் வன்னி முன்னணி வகிக்கும்!'


சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, பங்குனி 27 உ (9-4-72) ஞாயிறு 1391 ஸபர் 24 புத்தகம் 25 இதழ் 20


## சிங்கத் தமிழர் செல்லத்தம்பு வீரமுழக்கம்!



"வன்னி நாட்டில் வாழுகின்ற தமிழக் குலம் — அந்நியனை தமிழ மண்ணில் அடியெடுத்து வைக்க விடாது விரட்டிய வீரத் தமிழ்க் குலம்; பண்டார வன்னியன் மரபில் வந்த தன்மானத் தமிழக் குலத்தினர் நாம்.

"முழுத் தமிழ் ஈழத்திற்கும் வேண்டிய உணவினை உற்பத்தி செய்து கொடுக்கக் கூடிய அத்தனை வளமும் எம் வன்னி நாட்டிற்குண்டு!

"புதிய அரசியல் சட்டத்தின் கீழ் தமிழ் மொழி ஒதுக்கப்படுவதையும் தமிழினம் சிதைக்கப் படுவதையும் நாம் அனுமதிக்க மாட்டோம் என்ற தன்மானக் குரல் வன்னி நாடெங்கும் இன்று எதிரொலிக்கிறது. புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக எடுக்கப்படும் எந்த நடவடிக்கையிலும் வன்னிநாடு முன்நிற்கும் என்கின்ற உறுதியை இந் நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், வன்னியான் என்ற பிரதேசவேறுபாடு எதுவும் நம் மத்தியில் இல்லை — இஸ்லாமியன் கிறித்தவன், இந்து என்ற மத வேறுபாடும் ஏதும் எங்கள் மத்தியில் இல்லை—

"எங்கள் ஒரே தாரக மந்திரம் தமிழ் ஈழம்—தமிழ் ஈழத்தில் தமிழரசு. இதுவே எங்கள் இலட்சியம்.

"இந்த இலட்சிய வெற்றிக்காக தந்தை செல்வா காட்டும்

(7ம் பக்கம் பார்க்க)

### அந்தரங்கம் அம்பலம்

"குற்ற விசாரணை நீதிக்கமிஷன் சட்டத்தின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் புதிய அரசியல் சட்டத்துக்கு எதிரான சட்ட மறுப்பு இயக்கத்தைக் கூட நசுக்கி விட முடியும்"

—மேற்கண்டவாறு உதவியமைச்சர் ரட்ண தேசப்பிரிய சேனநாயகா நாடாளு மன்றத்தில் பேசும் போது வெட்ட வெளிச்சமாகக் கூறியுள்ளார்.

# தனிமாநில கோரிக்கைக்கு லண்டன் தமிழர் பேராதரவு!

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளை ஒரு தனி மாநிலமாக்கி அதற்கு சுயாட்சி உரிமை வழங்கப்படவேண்டுமென்ற தமிழரசுக் கட்சியின் கோரிக்கையை இலண்டன் வாழ் தமிழர்கள் குதூகலத்துடன் வரவேற்றுள்ளனர். இந்த முடிவைப் பாராட்டி தந்தை செல்வாவுக்கு கடிதங்கள் எழுதியுள்ளனர்.

இந்தச் செய்தியை இலண்டனிலிருந்து வெளிவரும் மேற்கு நாடுகளின் ஒரே தமிழ்த் திங்கள் இதழான 'லண்டன் முரசு' வெளியிட்டுள்ளது.

"இங்கிலாந்து வாழ் தமிழர்கள் தனி மாநில கோரிக்கைக்கு முழு ஆதரவு தெரிவித்து திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கட்கு அவசரத் தந்தியை அனுப்பியுள்ளனர்: தமிழர் தனி மாநிலக் கோரிக்கைக்கு முழு ஆத

(7-ம் பக்கம் பார்க்க)

## வி. பி. யின் அரசாங்கத்தைச் சாடுகிறார் விக்கிரமசிங்கா!

'அரசாங்கம் கடந்த பொதுத் தேர்தலின் போது பொது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மீறிவிட்டது.

'இன்று பாலமா தட்டுப் பாட்டினாலும், அவற்றின் விலை அதிகரித்துள்ளதாலும் ஏழைக் குழந்தைகள் பசியால் துடித்து வாடுகின்றன. இந்த அரசாங்கம் இன்று செல்கின்ற வழியில் சென்றால், இந் நாட்டை அபிவிருத்தி செய்வதென்பது ஒருபோதுமே முடியாத காரியம்.

'வருமானத்தை விட செலவு அதிகரித்துள்ளதால் நாட்டின் பொருளாதாரநிலை பலவீனமானதாகி விட்டது: உள்நாட்டுப் பிரச்சினைகளைச் சரியாக புரிந்துகொண்டால், அவற்றுக்கு தீர்வு காண்பது சுலபமானது:

'ஏழை மக்களுக்கு அரசு கொடுத்த வாக்குறுதி இன்று மீறப்பட்டுவிட்டது. அரசாங்கத்திலுள்ளவர்கள் தங்கள் உறவினர்களுக்கு உதவி செய்வது என்ற கொள்கை அடிப்படையில்தான் இன்று வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்படுகிறது.

'அன்று முதலாளித்துவ நாடுகளை எதிர்த்து பேசிய

(7-ம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்ட இணைப்பு இராணுவ அதிகாரி கையில்!

இணைப்பு அதிகாரியாக அந்தந்த மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களே கடமையாற்றுவது இதுவரை இருந்துவந்த வழக்கம். யாழ்மாவட்ட அரசாங்க அதிபரே இதுவரை காலமும் யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரியாகவும் இருந்து வந்தார்;

அண்மையில் யாழ் அரசாங்க அதிபர் விடுமுறையில் இந்தியா சென்றார். அவரது நிர்வாகப் பொறுப்பு மட்டும் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜோசப்பிடம் கொடுக்கப்பட்டது. யாழ் மாவட்ட பாதுகாப்பு விடயங்களைக் கவனிக்கும் பொறுப்பு யாழ் இராணுவ அதிகாரி கேர்ணல் ஜே. ரொட்ரிக்கோவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது!

## இஸ்மாயில் சாஹிப் மறைவு

இந்திய முஸ்லிம் லீக் தலைவரும் முஸ்லிம் மக்களின் பெரும் அபிமானத்துக்குரியவருமான காயிதே மில்லத் ஜனாப்: எம்: முகம்மது இஸ்மாயில் சாஹிப் எம். பி. ஏப்ரல் 5ந் திகதி சென்னையில் காலமானார்.

75 வயது நிரம்பிய இந்த முஜுபெருந்தலைவர் இந்தியாவின் பெருமை மிக்க தலைவர்களில் ஒருவராவார். அண்மையில் தமிழரசுத் தந்தை செல்வா அவர்கள் தமிழகம் சென்றிருந்த போது, தமது உடல் சுகவீனத்தையும் பாராது, தந்தையை வரவேற்றதுடன் ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்துக்கு தமது பூரண ஆதரவையும் தெரியப்படுத்தியவர் காயிதே மில்லத்.

மொழி, இன உணர்வு நிரம்பப்பெற்ற இத்தலைவர், இந்திய அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருந்த காலத்தில், தமிழையே இந்தியா முழுமைக்கும் ஆட்சிமொழியாக்க வேண்டும் என்றும் தமிழுக்கே அத்தகுதி உண்டென்றும் வாதாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது!

அவரது இழப்பு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

## இனசங்காரத்துக்கு கம்யூனிஸ்டுகள் முயற்சியா?

இந்நாட்டில் பயங்கரமான ஒரு இனக் கலவரத்தைத் தூண்டிவிடும் முயற்சியில் கொம்யூனிஸ்டுகள் ஈடுபட்டுள்ளனரா? இந்தக் கேள்வி அரசியல் அவதானிகள் மத்தியில் தீவிரமாக எழுந்துள்ளது.

கொம்யூனிஸ்ட் கட்சியின் சிங்கள நாளேடான 'அத்த' தமிழ் மக்களுக்கும் தமிழரசுக்கட்சிக்கும் விரோதமான—சிங்கள மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடக் கூடிய பொய்ச் செய்திகளை அண்மைக்காலமாக அடிக்கடி வெளியிட்டு வருகிறது. தமிழரசுக்கட்சி இரகசியமான பல திட்டங்களைத் தீட்டி வருவதாக பொறுப்பற்ற செய்திகள் பலவற்றை வெளியிட்டு சிங்கள மக்களின் உணர்ச்சியை அப்பத்திரிகை தூண்டிவிட்டு வருகிறது.

அதே சமயம் கம்யூனிஸ்டுகளின் தமிழ் வார ஏடோ, தமிழரசுக்கட்சியிலுள்ள தீவிரவாதி இளைஞர்களுக்கு வன்முறைத் தப்பிலி என்னிக்கப்படுவதாகவும், வன்முறைச் செயல்களுக்கு ஐருரச ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருவதாகவும் பொய்யும் புழுகுமான செய்திகளை வெளியிட்டு வருகிறது.

கைக்குண்டு, பயங்கரம், வன்முறை, ஆயுதப்பயிற்சி' என்றெல்லாம் பிதற்றி வருகிறது அந்த ஏடு!

கொம்யூனிஸ்டுகளே! ஏன் இப்படி அஞ்சி வெலவெலத்து நடுங்குகிறீர்கள்! வன்முறையின் சிராசர்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




ராஜன்,
யாழ்ப்பாணம்.

கே: பொன்னம்பலம் எங்கே?

ப: மீண்டும் அஞ்ஞாதவாசம் போய்விட்டார்!

நா இளங்கோ,
நல்லூர்.

கே: எங்கள் தமிழரசுக் கட்சி கேட்ட அடிப்படை உரிமைகளை அளித்திட அரசு முன்வருமா?

ப: முன்வந்தே தீரவேண்டிய ஒரு நிலை நிச்சயம் ஒரு நாள் ஏற்படத்தான் போகிறது!

சு. மகாதேவன்,
223, காலி தெரு,
கொழும்பு-3.

கே: கல்வியமைச்சரின் "மினி" கவுன் தடையைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

ப: அவர் செய்த ஒரே ஒரு நல்ல காரியம் இது தான் என்று நினைக்கின்றேன்!

இராசரத்தினம்,
யாழ்ப்பாணம்.

கே: தமிழ் மந்திரியொருவருக்கு மானங்கெட்ட தன்மை பொருந்திய "தாகு" பண்ணிக்கொடுத்து ("விலா" விளைதல்) செய்யவிட்டு மந்திரியை தரை யொருவர் தாஜா பண்ணியதுபற்றி யாழ் நகரெங்கும் கதையடிபடுகிறதே, உண்மையா?

ப: நெருப்பில்லாமல் புகைவருமா?

சு. நவரெட்ணராசா,
நீர்கொழும்பு.

கே: நாட்டில் அவசரகாலச் சட்டத்தையும் பத்திரிகைத் தணிக்கையையும் அமுலில் வைத்துக்கொண்டு அரசின் உத்தேச குடியரசுத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா?

ப: தலையெண்ணும் பெரும்பான்மை பலம் இருக்கும் போது எதுவுமே செய்யமுடியும்!

கே: வங்காள தேசத்தை ஓர் அங்கீகரிக்கு முன்னரே இலங்கை அரசு அங்கீகரித்ததின் மர்மம் என்ன?

ப: செல்வாவின் இந்திய விஜயம்தான்!

ராஜன்
காரைநகர்

கே: தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் அமிர்தலிங்கத்திற்கு வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஆதரவு பழையபடி பெருகுகிறதாமே?

ப: இதில் என்ன ஆச்சரியம்? சந்திரனை சில நிமிடங்களுக்குத்தானே கார் முகில் மறைக்க முடியும்.

ப. பாலசிங்கம்,
பீசாலை வடக்கு.

கே: இன்றைய சூழ்நிலையில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் புதிய அரசியல் திட்டத்தை மக்கள் நன்கு விளங்கக்கூடியதாய் கிராமங்கள் தோறும் சிறு கூட்டங்கள் கூட்டி பிரசாரம் செய்த பின்னர், தமிழ் மக்களின் வாழ்வுக்கு வழி கோலக்கூடியதாய் அமையும் தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு மக்களை அழைத்தால் கட்சி நடத்தவிருக்கும் போராட்டம் வெற்றி பெறுமென்பது எனது கருத்து.

ப: உங்கள் கருத்து சரியானதுதான். அதைத்தான் தமிழரசுக் கட்சி இப்போது செயற்படுத்தி வருகிறது!

எஸ். யோகேஸ்வரி,
ஒட்டுசுட்டான்.

கே: வட்டுக்கோட்டை முன்னை நாள் பிரதிநிதி நாவலர் அமிர்தலிங்கம் அவர்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்று கூறுவீர்களா?

ப: ராஜு, ரவி என இரு சிங்கக் குட்டிகள் இருக்கிறார்கள்.

ஏ. ஓ. லத்திப்,
மிருசுவில்.

கே: மாஜிப் பிரதமர் டட்லி சேனநாயகாவுடன் சேர்ந்து மாபெரும் ஜனநாயகத்தை நிறுவத் துடிக்கிறேன் — என்ற மனக்கோட்டை நிலைக்குமா? இல்லை உடைந்து பொடியாக்கப்படுமா?

ப: ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டியதுதான்! ஆனால் அதற்கு வழி டட்லி சேனநாயகாவுடன் சேர்வதுதானா?

செ. சோமநாதன்,
மண்டைதீவு.

கே: அற்ப சொற்ப பதவிக்கும் தன்னயத்திற்கும் தன்னினத்தின் மானத்தையே விற்பவர்கள், கனமானதாக கைக்குள் திணித்தால் கை பிடித்தவளையே காணிக்கையாக கொடுப்பார்களா?

ப: கொடுத்துக்கொண்டு தானே இருக்கிறார்கள்!

கே: ஈழத் தமிழினத்தின் முதல் எதிரி யார்?

ப: நமக்குள் இருக்கும் ஐந்தாம் படைகள்!

க. சண்முகராசா,
வயலடி
காங்கேசன்துறை.

கே: தலைக்கனம் பிடித்த பச்சோந்தி மூவரும் எங்கே?

ப: தங்களுக்குத் தாங்களே குழிதோண்டுகிறார்கள்!

கே: தன் தன்னாத வயதிலும் தமிழைக் காக்க பாடுபடும் தந்தை செல்வாவை, தாக்கிப் பேச நாக்கூசவில்லையே தினபதி சிவநாயகத்திற்கு?

ப: விபச்சாரம் செய்யும் ஒரு பெண்ணிடம் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய குணங்களை நீங்கள் எப்படி எதிர்பார்க்கலாம்?

இராசேந்திரம்,
கொழும்பு-12.

கே: 'Bore' ஆட்டம் என்னுல் என்ன?

ப: தினபதியாரின் துரோக ஆட்டம்!

வெட்டிஒட்டப்பட வேண்டிய முகவரி—
திருவாளர் குயுக்தியார்,
மே/பா சுதந்திரன்
[illegible]
கொழும்பு—12

## தமிழ் ஈழத்தின் உள்ளூராட்சி மன்றத்தினரே உறக்கம் ஏன் இன்னும்!

× புதிய அரசியல் திட்டம் தமிழினத்தின் மரண சாசனமாக இருப்பதால், அதை சகல தமிழ் மக்களும் வன்மையுடன் எதிர்க்கவேண்டும்!

× புதிய அரசியல் திட்டத்துக்கு ஆதரவாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் எவரும் கையெழுத்திடக் கூடாது!

இவ்வாறுன தீர்மானங்களை தமிழ் ஈழத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் பல நிறைவேற்றி தமிழ் மக்களின் எதிர்ப்புணர்ச்சியை அரசுக்கு எடுத்துக்காட்டி வருகின்றன!

- காரைநகர் வடக்கு,
- காரைநகர் தெற்கு,
- புத்தூர்,
- ஏருவூர் மேற்கு,
- கரைச்சி,

ஊராட்சி மன்றங்கள் அரசியல் சட்டத்துக்கு எதிராக ஏற்கனவே தீர்மானங்களை நிறைவேற்றி விட்டன. மட்டுநகர் மாநகரசபையிலும், ஆரையம்பதி ஊராட்சி மன்றத்திலும் அரசியல் சட்டத்துக்கு எதிரான தீர்மானங்கள் விரைவில் வரவிருக்கின்றன!

எனவே, தமிழ் ஈழத்திலுள்ள ஏனைய ஊராட்சி மன்ற உறுப்பினரே! பட்டினசபை மன்ற உறுப்பினரே! நகராட்சி, மாநகராட்சி மன்ற உறுப்பினரே!

ஏன் இன்னும் தயக்கம்? ஏன் இன்னும் தாமதம்?

புதிய அரசியல் திட்டம்பற்றி உங்கள் நிலையென்ன?

உடனடியாக கூடி தீர்மானம் நிறைவேற்றுங்கள்! இதன் மூலம் தமிழ் தேசிய இனத்தின் ஒன்றுபட்ட எதிர்ப்புணர்வை அரசுக்கும், அரசுக்கு ஆலவட்டம் வீசும் தமிழ்த் துரோகிகளுக்கும் எடுத்துணர்த்துங்கள்!

தீர்மானத்தின் பிரதியை எமக்கும் அனுப்புங்கள்!

இனத்துக்கும் மொழிக்கும் நீங்கள் ஆற்றவேண்டிய கடமை இது! இன்றே அதைச் செய்வீர்!!

## உழுத்தர் கூட்டம்

(கவிஞர் மூந்தல் மூத்து)

அறத்தமிழர்—மறத்தமிழர் இணைந்துவிட்ட
ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்துவந்து
புறத்தமிழர் இங்குண்டோ? என்று கேட்டேன்!
புலம்பாதே! போயா!! என்றொலிக்கக்கேட்டு
சிரத்தையொடும்-சினத்தோடும் திரும்பிப்பார்த்தேன்!
இரண்டுவரும் கும்பலொன்று தெரியக் கண்டேன்
உரத்தகுரல் படைத்தசிலர் உறுமிக்கொண்டு
ஓடிவந்து என்புயத்தை உலுப்பினர்கள்;

மறத்தமிழர் நாங்களா! வாய்வீச்(சு) எங்கள்
மரபிற்கே உரித்தாய மகுடம்! அஃதே
பொறுத்திருந்தோம்! முடியாது, புறப்பட்டுள்ளோம்!
பொதுநோக்கம் எமக்கில்லை: புகழ்தான்வேண்டும்!
கறுத்த உளமிருந்திடினும் கபடமில்லைக்
காரணங்கள் பல அடிப்போம்! கலைமயில்லை;
ஒறுத்திடுவோம்! உரிமையெனக் கூறுவோரை
ஒருபோதும் நாமதற்கு ஒத்துப் பேசவோம்:

சாதி—மொழி—சமயமென எமக்கொன்றில்லைத்
தமிழரெனக் கூறிடுவோம்! தலைமைக் கெட்டோம்!!
பாதியிலே விலகிநின்று 'பந்தம்' ஏற்றிப்
பதவிகளைத் தேடிடுவோம்! பல்லிளிப்போம்!!
நீதியெனக் கூறும் ஒரு வரியைத்தானும்
நெஞ்சத்தில் நாமேற்கோம்! நெருங்கமாட்டோம்!!
பீதியெதும் உண்டானால் பெரும்புள்ளிகள்
பின்புறத்தே வாலபிடித்தும்பிழைத்துக்கொள்வோம்!

அழிந்திடினும் தமிழர்மொழி, அசையமாட்டோம்!
அழித்திருந்து கெடுத்திடுவோம்! ஆளைக்காட்டோம்!!
பிழிந்திடினும்! அரசமைப்பைப் பேசமாட்டோம்!!
பிறற்றினரும் அசடுகளைப் பேணிக்காப்போம்!
ஒழிந்திடினும் தமிழர் இனம் உருகமாட்டோம்!!
ஒன்றிக்காக்—காய்பிடித்து உழைத்துக் கொள்வோம்!
நலிந்திடினும்! அமைச்சர்களை நக்கி—நக்கி
நாம் பிழைப்போம்! நமனுக்கும் நடுங்கமாட்டோம்!!

பிழைக்கவழி தெரியாத போயா! கோவாய்!!
பிறிது! தமிழ்க்குருதி; என்று கூறு
உழைக்கவழி ஒன்றுண்டு! அதுதான் ஒற்றி
உடலைப்போல் கொள்கைகளை மாற்றவேண்டும்!
தழைத்திடுமுன் குடும்பங்கள்! அதைவிடுத்துத்
தமிழென்றும்—உரிமையென்றும் சப்தம் போட்டால்
உழைப்பேது? உயர்வேது? உணர்ந்து பார்த்து
ஒதுங்கிக்கொள்! என்றுர(வு) உழுத்தர் கூட்டம்.

## 'எனதெண்ணம்'

—அனங்கன்—

மாற்றுன்னைக் கூவியே மானவுணர் வற்றவனே
தேற்று முளைத்த நெருஞ்சியே!—சாற்றும்
கவிஞர் கருத்துக் கருவிரு கொண்டதடா
விலைகொடுத்து கெட்டாதே விண்;

தன்மான மற்றவனே தாய்க்குலிலை சொல்பவனே
என்னே பிதற்றியுனை ஏத்துகிறாய்!—அன்னவரோ
தந்தாரே யங்கோர் 'தமிழ்நாடு'. நீயிங்கு
எந்தாய்க்குத் தந்தாய் எரி;

கயப்புச் செயலில் கவிகொள் பவரே
நிலைக்கும்நாள் நீயிங்கு நீடோ?—நிலையில்லா
அற்ப சுகத்திற்கு ஆசைப்பட்டு உன்னினம்
விற்கத் துணிந்ததுன் வம்பு.

மாற்றானை மண்டியிட்டு மானம் விலைபேசி
ஆற்றுது செய்வதுமுன் ஞண்மையதோ?—கூற்றுன
கோடரிக் காம்பெநீ கொல்லும் வினையாளுன்
நாடழிக்கு முன்னை நசித்து.

## புறப்படடா பெரியவரின் பின்னே!

—சோமலிங்கம்—

தன் உயர்வு தலை எண்ணித் தமிழ் மக்கள்
தம்நாடு தமிழ் தன்னை அடிமையாக்கி
உண்ணுதற்கும் உடுப்பதற்கும் விரும்புகின்ற
உருமாறும் ஒந்திகளை நம்பவேண்டாம்
என் நாடு எந்தன்மொழி தமிழ மக்கள்
இழிவு தனை நீக்குதற்கு இன்னல் ஏற்கும்
தன்மானத் தலைவர்களை நம்பி வாழ்வாய்
சரித்திரத்தில் அழியாத இடத்தைக் கொள்வாய்

தாய்தன்னை வதைக்கின்ற தலையனுக்கு
தரணியிலே வரவேற்பு எங்குமில்லை
தாய்மொழியை அழிக்கின்ற தமிழனுக்கு
தமிழகத்தில் இடமில்லை அவர்கள் வாழ்வு
தேய்பிறையாய் மாறிவிடும் சிறுமை உற்று
தேசத்தில் இருப்பதுவும் தெரியமாட்டா
வாய்மையுடன் தமிழுக்கே தொண்டுசெய்யும்
வஞ்சமற்ற பெரியோர் சொற்படியே வாழ்வாய்.

நல்லூருக் கந்தனுக்கு வணக்கம் செய்து
'நல்வாழ்வு தா' என்று கண்ணீர் சிந்தி
பல்லோரும் பார்த்திருக்க இருகைகூப்பி
இருவிழியும் தான் மூடி இறைஞ்சுவார்கள்
நல்லூருக் கந்தன் அவன் தந்த இன்ப
நறவு நிகர் தமிழ் அழிய உடந்தையாகும்
பொல்லாத கொடியவரை நம்பவேண்டாம்
புறப்படடா பெரியவரின் பின்னே, நீயும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மேடை

## கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி...!

அன்பு நண்பா,

'செந்தமிழே, செழுந்தமிழே, சீரிளமைத் தமிழே! பைந்தமிழே, பழந்தமிழே பார்போற்றும் தமிழே! மூத்ததமிழே, முழுநிலாத்தமிழே, மூவேந்தர் வளர்த்த தமிழே! கரும்புத் தமிழே, கன்னித் தமிழே கனித் தமிழே, கம்பன் வளர்த்த தமிழே! வள்ளுவனும், இளங்கோவும், வரிசை செய்த தமிழே! யாவரும் போற்றுகின்ற தேனும் எம் தமிழே! முருகனும் முக்கண்ணனும் முழுமை செய்த தமிழே! இஸ்லாமியரும் கிறிஸ்தவரும் இறைஞ்சி நின்ற தமிழே! தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடுசூழ்கலைவாணர்களும்என்றுபிறந்தவள் என்றறியாத எம் தமிழே! தாயே! கலங்குகிறதம்மா என் கண்கள்! எத்தனையோ வீரர்களையும் விவேகிகளையும் தீரர்களையும் தியாகிகளையும் நீ பெற்றிருந்ததாக வரலாறுகள் கூறுகின்றனவே! உன்னை இகழ்ந்தான் வடநாட்டு மன்னன் ஒருவன் என்ற ஒரே காரணத்துக்காக படை நடத்திச் சென்று இமயத்தை வென்றவனும் உன் மகன் தானே அம்மா! உன் வரலாற்றைப்புரட்டினால் வீரர்களைக்காண முடிகிறதே தவிர, கோழைகளையும் கையாலாகாதவர்களையும் கண்டிட முடிவதில்லையே! உன்னைக்காட்டிக்கொடுத்து வயிறு வளர்த்த உலுத்தர்களை நீ பெற்றதாக வரலாறேயில்லையே! புறநானூறு புகழும் எத்தனையோ வீரர்களைப் பெற்றிருந்த நீ, ஈழத்திலே இன்று சில கோழைகளையும் பச்சைத் துரோகிகளையும் ஏன் அம்மா பெற்றாய்?'

—இவ்வாறுதான் தமிழன்னை வேதனையில் கண்கலங்கிப் புலம்ப நேர்ந்தது அண்மையில் வட்டுக்கோட்டைத் தியாகராசா பேசியிருந்த பேச்சொன்றினைப் படித்திட்டபோது!

ஆம் நண்பா, தமிழர்களின் உதிரத்தை சொரிந்திட வைத்திடக்கூடிய—தமிழின விடுதலைக் கிளர்ச்சியின் ஆணிவேரையே சின்னாபின்னப்படுத்திடக்கூடிய — தமிழர்கள் அனைவரையும் வெட்கித்தலைகுனிந்திடக் கூடிய கருத்தொன்றினை அவர் கூறியிருக்கிறார்!

தணிக்கை

'இந்தியாவில் ஹிந்தி பேசும் மக்கள் 42 சதவீதம்தான் இருக்கிறார்கள்; ஆனால் ஹிந்தி மொழி அங்கு அரசகரும மொழியாக இருக்கிறது. இந்நிலையில் 80 சதவீதமானோர் சிங்கள மக்கள் வாழும் இந்நாட்டில், சிங்களம் அரசகரும மொழியாக இருப்பது நியாயமானதே. அவர்களின் சிங்கள மொழியை நாம் ஏன் அரசகரும மொழியாக ஏற்றுக்கொள்ளமுடியாது?'

—இதுதான் தியாகராசாவின் துரோகத்தனமான கேள்வியாகும். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் பேசுகையிலேயே இவ்வாறு கேட்டிருக்கிறார் தியாகராசா!

தமிழர்கள் கொஞ்ச நஞ்சம் கூட மானம் ரோசம் அற்றுவிட்டார்களா? மொழியுணர்வு என்பது முற்றாக அழிந்துவிட்டதா? இல்லாவிட்டால், ஒரு தமிழரான தியாகராசா இப்படியொரு துரோகத்தனமான கருத்தை தமிழ் மக்களிடையே, அதுவும் தமிழ் ஈழத்தில் வைத்துக் கூறியிருக்க முடியுமா! இப்படிக் கூறுவதற்கு எத்துணை நெஞ்சழுத்தம், திமிர்—இருந்திடவேண்டும் அவருக்கு!

நண்பா, 'இலங்கை நாட்டின் ஒரே அரசகரும மொழியாக்கியது நியாயமானது —அதனைத் தமிழர் அனைவரும் ஏற்றிட வேண்டும்'—இப்படி ஒரு தமிழர் கூறுவாராயின் அவர் தமிழரேயல்லர்; வெறும் உணர்ச்சியற்ற முண்டம்; சோற்றுலடைந்த பிண்டம்; சதையாலும் இரத்தத்தினாலும் ஆக்கிவைத்த நடைப்பிணம்; என்றே நான் திடமாகக் கூறுவேன்! அப்படிப்பட்டவன் தமிழன் என்று தன்னைச் சொல்லிடவே அருகதையற்றவன்; தமிழ் மக்கள் மத்தியில் வாழுதற்கே யோக்கியதையற்றவன்! இப்படிப்பட்டவன் தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாகவும் இருக்கிறான் என்றால், அதைவிட வெட்கக்கேடு வேறு என்ன இருந்திட முடியும் தமிழினத்துக்கு!

தமிழினத்தின் விடுதலைக் கோட்டையாகத் திகழ்ந்திட வேண்டிய வட்டுக்கோட்டைத் தொகுதி—இன்று தமிழ்த் துரோகியொருவரைத் தனது பிரதிநிதியாக்கியதன் மூலம் துடைக்க முடியாத களங்கத்தை தனக்குத்தானே ஏற்படுத்திக்கொண்டு விட்டது! என்ன செய்யலாம்? தமிழினத்தின் தலைவிதி இப்படியாகி விட்டது!

'தமிழர்கள் பொன்னை இழப்பார்கள்; பொருளை இழப்பார்கள்; தம்மிடமுள்ள அத்தனை செல்வங்களையும் இழப்பார்கள்; தமிழ்மொழியை மட்டும் இழந்திடமாட்டார்கள்' என்று பேரறிஞர் அண்ணா கூறியதைத்தான் இந்த மண்டூகங்களுக்கு கூறி வைத்திட விரும்புகிறேன்!

இந்நாட்டில் சிங்களம் சிங்களவர்களுக்கு ஆட்சி மொழியாக இருக்கட்டும்; அதை யாரும் எதிர்த்திடவில்லை; ஆனால் சிங்களத்தை தமிழர்களுக்கும் ஆட்சிமொழியாக்க முயற்சிப்பதைத்தான் தமிழினம் கடுமையாக எதிர்க்கிறது!

மொழியே ஓர் இனத்தின் விடுதலை உணர்வுக்கு வித்தாக விளங்கிடுவது; அந்தமொழியுணர்வை மட்டந்தட்டி, நாசப்படுத்திவிட்டால், விடுதலையுணர்வையும் அழித்துவிடலாமெனக் கருதி அதற்கு எட்டப்பர்களைப் பயன்படுத்திட நினைத்திருக்கிறது அரசு; அரசின் நச்செண்ணத்துக்கு முதற்பலியாகியிருப்பவர் தியாகராசா!

வங்கத்தில் நடைபெற்ற விடுதலைப்போராட்டத்தின் மூலவேராக இருந்தது மொழிப் போராட்டம்தான்! உருதுவுடன் வங்கமும் ஆட்சி மொழியாக்கப்படவேண்டும் என்று தொடங்கிய போராட்டம்தான் விரிவடைந்து விடுதலைப் போராட்டமாக பின்னர் உருவெடுத்தது; வங்கமும், உருதுவுடன் சம அந்தஸ்துள்ள ஆட்சிமொழியாக்கப்படவேண்டும் என்கின்ற கிளர்ச்சி, வங்கத்தில் நடைபெற்ற நேரத்தில், உருதுவையே வங்க மக்களாகிய நாமும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்வோம் என்று எந்த வங்காளியும் கூறியதில்லை! தியாகராசாவைப் போன்ற இன. மொழித் துரோகிகள் வங்க மண்ணில் தோன்றியதில்லை.

மொழி, இனப்பற்றில் வங்காளிகளுக்கு சளைத்தவர்களல்லர் தமிழர்கள் என்பதை ஈழத்தமிழினம் நிச்சயம் ஒருநாள் எடுத்துக்காட்டத்தான்போகிறது!

மொழியே நமது ஜீவன்; மொழியே நமது வாழ்வு; மொழியே நமது தெய்வம்; அந்த மொழிக்கு — அருமைத் தமிழ் மொழிக்கு வாழ்வு பெற்றுக்கொடுத்து, நாமும் வாழ்வோமேதவிர மற்றோர் மொழிக்கு ஒரு போதுமே ஈழத்தமிழினம் மண்டியிட்டு வாழாது என்பது நிச்சயம்! நிச்சயம்!! நிச்சயம்!!!

இந்தியாவில் இந்தி மொழி அரசகரும மொழி ஆக்கப்பட்டிருக்கிறதாம்-கூறுகிறார் தியாகராசா. இந்திமட்டுமல்ல ஆங்கிலமும் அங்கு துணை ஆட்சிமொழியாக்கப்பட்டிருக்கிறது என்பதையும், இந்தி பேசாத மக்கள் விரும்பும் காலம்வரை ஆங்கிலமும் துணை ஆட்சிமொழியாக நீடிக்கும் என்று காலஞ்சென்ற பாரதப் பிரதமர் பண்டித நேரு அளித்த உறுதிமொழி சட்டமாக்கப்பட்டுள்ளதையும் எம். ஏ. பட்டதாரியான தியாகராசா அறிந்திடாமலிருப்பது விந்தையிலும் விந்தை!

மற்றோர் உண்மையினையும் தியாகராசா உணர்ந்திடவேண்டும். இந்தி, இந்தியாவின் ஆட்சிமொழியாக சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதே தவிர, இந்தியை தங்கள் ஆட்சிமொழியாக தமிழக மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. 1938ம் ஆண்டு தமிழ் நாட்டில் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டம், இன்றும் தமிழ் நாட்டில் தணியவில்லையென்பதையும் — தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், தமிழ் நாட்டிலிருந்து இந்தி முற்றாக அகற்றப்பட்டு, ஆங்கிலம், தமிழ் என்ற இருமொழிக் கொள்கையே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும் புரிந்துகொள்ளாமல் தியாகராசா உளறியிருக்கிறார்!

தமிழ்நாட்டில் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போரில் — தமிழுரிமைப் போரில், அடிபட்டு, உதைப்பட்டு, சிறைப்பட்டு சித்திரவதைப்பட்டு, இன்னல் பலவற்றை ஏற்ற இளைஞர்கள் எத்தனை எத்தனை ஆயிரம்— இந்தி எதிர்ப்பு போரில் துப்பாக்கிச் சூட்டினை நெஞ்சிலே ஏற்ற மாணவச் செல்வங்கள் எத்தனை— இந்திக்கு எதிராக தங்கள் [illegible] தீயின் கோர நாக்குக்கு [illegible] தமிழ்க் காளைகள் எத்தனை பேர் என்பதெல்லாம் மொழியுணர்வுமிக்கவர்கட்கு தெரியுமே தவிர சோற்றுப் பிண்டங்களுக்கு எப்படித் தெரியும்?

கனடாவில் ஆங்கிலமும் பிரெஞ்சும் ஆட்சி மொழி; சுவிட்சர்லாந்தில் நான்கு மொழிகள் ஆட்சி மொழி; செக்கோசிலவேக்கியாவில் 'செக்' மொழியும் 'சுலோவக்' மொழியும் ஆட்சி மொழி; சிங்கப்பூரில் நான்கு மொழி — அதில் தமிழும் ஒன்று — ஆட்சி மொழி; என்றெல்லாம் இருக்கும்போது இரண்டு மொழிகள் ஈழத்தில் ஏன் ஆட்சி மொழிகளாக இருக்கமுடியாது?

தணிக்கை

நண்பா, தியாகராசா இன்று பதவி ஆசைபிடித்து — ஆளுங்கட்சியின் காலைப் பிடித்துக்கொண்டு வாயில் வந்ததையெல்லாம் உளறித்திரிந்திடினும் அவர் 1956ம் ஆண்டு வெளியிட்டிருந்த 'தனித் தமிழ் ராஜ்யம்' என்னும் நூலிலிருந்து சில பகுதிகளை கீழே தருகிறேன்; அந்த நூலில் அவர் கூறிய அவ்வளவையுமே உனக்குத் தரவேண்டும் என்பதுதான் என் ஆசையானாலும், இன்றுள்ள தணிக்கைமுறை அதற்கு இடம் தராதென்பதனால், சில குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் கீழே தருகிறேன்; முழுவதையும் தந்திடக்கூடிய சூழ்நிலை தோன்றும்போது நிச்சயம் தருவேன் —

"மேன்மைதங்கிய ராணியாவது, சோல்பரி பிரபுவாவது, நமது மீட்சிக்கு வரப்போவதில்லை; டொனமூர்த்திட்டத்திலும் சோல்பரித்திட்டத்திலும் நாம் நமது உரிமைகளை இழந்துவிட்டோம்; மூன்றாவது முறையும் நாம் மற்றவர்களை நம்பி நமது உரிமைகளை இழந்துவிடமுடியாது; வாக்குறுதிகள் வெறும் சூனியமாகும். எத்திட்டத்துக்கும் நாம் சம்மதித்தல் ஆகாது; எங்கள் மேல் சுமத்தப்பட்ட திட்டங்களெல்லாம், சிறுபான்மையோரது ஜனநாயக உரிமைகளையும், சலாக்கியங்களையும் கிழறுத்து விட்டன. நாம் நம் சுயநிர்ணயத்தைச் சர்வதேச சங்கமூலம் பெற்றுக்கொள்ளலாமா? அங்ஙனம் பெற்றுக்கொள்ள முயல்வது காலத்தையும் சக்தியையும் வீண் விரயம் செய்வதாகும்; நாம் நம் நோக்கத்தை வெளி உதவியின்றி நம்முயற்சியாலேயே பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு அஹிம்சையும் பிரார்த்தனையும் நமக்கு உதவிசெய்யும். அத்துடன் சத்தியாக்கிரகத்தின் மூலம் பல்வேறு முறைகளையும் கையாள இயலும்; பலாத்காரத்தை தவிர்க்கவேண்டும். விடாமுயற்சியாலும் தியாகத்தாலும்தான் நாம் எம் நோக்கத்தை நிறைவேற்றலாம். சிலர் சிங்களவர் நாம் கேட்டதை கொடுத்துவிடுவார்களோவென்று வினவக்கூடும். அவர்கள் எமக்கு அந்தஸ்தைக் கொடுக்கவோ அல்லது பிரிவினைக்கவோ மாட்டார்கள்; எமக்கு உரியதை நாம் உண்டாக்கிக்கொள்ளல் வேண்டும்; உலகில் எவரும் இதை மறுக்கமுடியாது. எமது ஆத்மபலமே எம்மை மீட்கும்."

"சிங்களத் தலைவர்களது வாக்குறுதிகளைத் தமிழர் ஏற்றுக்கொள்வது புத்தியற்றதும் செய்கைமுறையற்றதாகும்; இவ்வுறுதி மொழியெல்லாம் ஏமாற்றத்தக்கிடமாகும்; ஒரு தனி அரசியல் அந்தஸ்து, அல்லது சமஷ்டி அரசியலின் கீழ் சம அந்தஸ்து கொடுக்கப்பட்ட நாட்டின் முன்னேற்றத்துக்காக தமிழர் ஒத்துழைக்க முடியும். ஆனால்

தணிக்கை

"சிங்களவருடன் சரிசமமாக சேர்ந்து ஒரு அரசின்கீழ் வாழமுடியுமென்று சில தமிழ்த்தலைவர்கள் எண்ணுகின்றனர்; இதுபோன்று தமிழரை அழித்தொழிக்கக்கூடிய வழிவேறில்லை."

— இப்படியெல்லாம் தம்மையும்விட தீவிரமான கருத்துக்களை அன்று வெளியிட்ட தியாகராசா தான் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி, அதுவும் தேய்ந்து என்னமோ ஆனது போல, எந்தவழி தமிழரை அழித்தொழிக்கக்கூடிய வழியென்று அன்று தாமே மனப்பூர்வமாக கூறினாரோ அதே அழிவுப் பாதையை தமிழினத்தின் வாழ்வுப்பாதையென்று இன்றுதமது மனச்சாட்சிக்கு விரோதமாக கூறிவருகிறார்! அவர் பேசவில்லை, நண்பா பதவி ஆசை அப்படி அவரைப் பேசவைத்து வருகிறது! அவ்வளவுதான்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## சனநாயகத்தின் புதைகுழி!

### ———————— நுழைவாயில்

இந்த வாரம் இரண்டு — — — — — மசோதாக்களை கூட்டணி அரசாங்கம் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்திருக்கிறது. இந்த இரண்டு மசோதாக்களும் இந்நாட்டில், ஜனநாயகத்தையும் குடிமக்களின் அடிப்படை உரிமைகளையும் முற்றுகப்பறிக்கும் — — — — — சட்டங்கள் என்பதில் துளியும் ஐயம் கிடையாது.

ஆம், குற்ற விசாரணை நீதிக் கமிஷன் மசோதாவும் சட்ட வியாக்கியான மசோதாவும், இந் நாட்டில் ஜனநாயகத்தை முற்றுகப் புதை குழிக்கு அனுப்பி——————ஆட்சியை நிலை நாட்டப் போதுமானவையாகும்.

இந்த மசோதாக்கள் இந்நாட்டுக் குடி மக்கள் இதுவரை காலமும் அனுபவித்து வந்த அடிப்படை சுதந்திரங்களையும், உரிமைகளையும் முற்றாக மறுத்து அவர்களை அதிகார பீடத்திலிருப்போரின் அடிமைகளாக்குகின்றன என்பதே நமது கருத்தாகும்.

— — — — — — — — — — — — —
— — — — — — — — — — — — — —
— — — — — — — — — — — — — —
— — — — — — — — — — — — — —
— — — — — — — — — — — — — —

குற்றம் செய்ததாக சந்தேகிக்கப்பட்டு கைதுசெய்யப்படும் ஒருவன், தான் குற்றவாளியல்ல என்பதை நிரூபிப்பதற்கு அவனுக்கு எல்லாவகையான சந்தர்ப்பங்களையும் அளிப்பதே சனநாயகத்தைப் பின்பற்றுவதாக கூறும் அரசுகள் பின்பற்றிவரும் நாகரீக நீதி முறையாகும்—நீதியை நிலைநாட்டவும் தவறுகள் ஏற்படாமல் தடுக்கவும் இந்த முறையே சனநாயகத்தின் தொட்டிலான இங்கிலாந்து போன்ற நாடுகளில் இன்றுவரை சரியாக கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

கூட்டணி அரசின் புதிய மசோதாக்களோ, இந்நாட்டுக் குடிமக்களுக்கு இந்த அடிப்படை உரிமையை மறுப்பதாக அமைந்துள்ளன. குற்றம்சாட்டப்படுபவர், தான் குற்றவாளியல்ல என்பதை நிரூபிப்பதற்குரிய வழிவகைகள் யாவும் புதிய மசோதாக்களின் படி அடைக்கப்பட்டுள்ளன.

குற்றவாளி என்று குற்றம்சாட்டப்பட்டு கைதுசெய்யப்படும் ஒருவனுக்கு அவன் கைதுசெய்யப்படுவதற்கான காரணம் தெரிவிக்கப்படமாட்டாது; பொலீசார் பலவந்தமாகவோ, வன்முறையைப் பிரயோகித்தோ சட்ட விரோதமாகவோ அவனிடம் சாட்சியம் பெற்றிருந்தால், அந்தச் சாட்சியமே, நீதிமன்றத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும்; ஜூரர்களை வைத்து பகிரங்கவிசாரணை நடைபெறமாட்டாது; சாட்சிகளை குற்றம்சாட்டப்பட்டவர் குறுக்கு விசாரணை செய்யமுடியாது; குற்றம்சாட்டப்பட்டவர் தனக்கு சார்பான சாட்சியங்களை காட்டமுடியாது; தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்யமுடியாது; ஒருவரை நீதிமன்றம் விடுதலைசெய்தாலும் தொடர்ந்தும் அவரைத் தடுப்புக்காவலில் வைத்திருக்க முடியும்.

— — — — — — — — — — — — — —
— — — — — — — — — — — — — —
— — — — — — — — — —சனநாயகத்துக்கு சாவு மணியடிக்கும் இம்மசோதாக்களை. கொண்டு வரவேண்டாம் என்றும், ஒத்திப்போடுமாறும், இந்நாட்டின் ஏனைய அரசியற்கட்சிகளும், பெரும்வழக்குரைஞர்களும், கல்விமான்களும், ஜனநாயகவாதிகளும். விடுத்த வேண்டுகோள்கள் அனைத்தையும் தூக்கியெறிந்துவிட்டு மசோதாக்களை கொண்டுவந்திருக்கிறது கூட்டணி ஆட்சி.

தனது தோழமைக் கட்சியான கொம்யூனிஸ்ட்கட்சியின் சிறும் எதிர்ப்பையும் கொஞ்சம் கூட லட்சியம் செய்யவில்லை அரசாங்கம்; இந்த நிலையில், கொம்யூனிஸ்டுகள் இனியாவது அரசாங்கத்திலிருந்து வெளியேறி தம்கள் மானத்தையும், மக்களின் உரிமைகளையும் காப்பாற்றப் போகிறார்களா அல்லது இன்னும் ஒட்டிக்கொண்டிருந்து மக்களைக் காட்டிக்கொடுக்கப் போகிறார்களா என்பதைப் பொறுத்திருந்துபார்ப்போம்.

பயங்கரவாதிகளைத் தண்டிப்பதற்காகவே இந்தப் — — — —மசோதாக்களை கொண்டு வந்திருப்பதாக அரசு சார்பில் கூறப்படுகிறது. — — — — — — — சட்டங்களைக் கொண்டு வந்து சிலரை தண்டிப்பதன் மூலம் மட்டும் பயங்கரவாதத்துக்கான காரணங்களை ஒழித்துவிடமுடியாது.

பயங்கரவாதிகளைத் தண்டிப்பதற்கு வழி — — — — — —சட்டங்களைப் பிரயோகிப்பதல்ல — பயங்கரவாதத்துக்கான காரணங்களை கண்டுபிடித்து அவற்றை நாட்டில் இல்லாமற் செய்வது தான்.

பயங்கரவாதத்தில் ஈடுபட்டதாக கூறப்படுபவர்களை தண்டிப்பதற்கு நடைமுறையிலுள்ள சட்டங்களே போதுமானவை. — — — — — இப்போதைய சட்டங்கள் துளியும் அவசியமற்றவை என்பதே நமது கருத்தாகும்.

அவசரகாலச் சட்ட விதிகளைப் பயன்படுத்திப்பயங்கர வாதிகளைத் தண்டிப்பதற்கு என்ற போர்வையின் கீழ் இப்படிப்பட்ட — — சட்டங்களை கொண்டு வந்து அவசர அவசரமாகக் நிறைவேற்றுவதன் மூலம், இந்நாட்டில் மக்களின் அடிப்படை சுதந்திரங்களையும், சனநாயகத்தையும், நீதி முறையையும், அரசு முற்றாக புதை குழிக்கு அனுப்பி விட்டது.

——————————————————————
——————————————————————
——————————————————————
——————————————————————
——————————————————————
——————————————————————

# 'அரசியல் சட்டத்தை எதிர்க்குக! இன்றேல் ராஜினாமாச் செய்க!'

## கொக்குவில் கிராமசபை அருளம்பலத்திடம்கேட்கிறது!

இலங்கையில் இதுவரை காலமும் இருந்துவந்த சோல்பரி அரசியல் அமைப்பினை மாற்றி, இலங்கை ஓர் பூரண சுதந்திரமுள்ள குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட இருக்கும் இவ்வேளையில் தயாரிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் அமைப்பில், தொடர்ந்தும் தமிழ் இனம் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கணிக்கப்பட்டுச்சட்டம் உருவாக்கப்பட்டிருக்கின்றதெனவும், குறிப்பாக சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்திற்கும் பாதுகாப்பு அளித்து, தமிழ் மொழியையும் மற்றும் மதங்களையும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றதெனவும், இதனால் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் புதிய அரசியல் திட்டத்தை எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோமெனவும் இப் புதிய அரசியல் சாசனம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பொழுது தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் எதிர்க்க வேண்டுமென தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளல் வேண்டுமெனவும், முக்கியமாக எமது தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தி. அருளம்பலம் அவர்கள் இவ் அரசியல் அமைப்பினை ஆதரித்து வாக்களிக்கக் கூடாதெனவும் அவரைப் பணிவன்புடன் கொக்குவில் கிராம சபை கேட்டுக் கொள்ளல் வேண்டுமென சபைக்கூட்டத்தில் திரு. பெ. கனகசபாபதி அவர்கள் பிரேரித்தார்.

மேற்படி பிரேரணையில் 3ம் வட்டார உறுப்பினர் திரு: மு. பொ. நவரத்தினம் அவர்கள், புதிய அரசியல் சாசனத்தைத் திருவாளர்கள், தி. அருளம்பலம், பா. உ., வி. ஆனந்தசங்கரி, பா. உ., ஆ. தியாகராசா பா. உ. ஆகியோர் எதிர்த்து வாக்களிக்க முடியாதெனின் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினுமா செய்தல் வேண்டுமென இச்சபை கேட்டுக்கொள்ளல் வேண்டுமென்று சேர்த்துக்கொள்வதுடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இத் தீர்மானத்தின் பிரதிகள் அனுப்பப்படல் வேண்டுமெனவும் திருத்தப் பிரேரணையைப் பிரேரிக்கத் திரு: ந. அருணாசலம் அவர்கள் அனுமதிக்கச் சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

## சிறையில் தள்ளுவதானாலும்...!

"தமிழரசுக் கட்சிப் போராட்டங்கள் அஹிம்சை அடிப்படையில் தான் அமையும். நாங்கள் ஏதாவது சட்டத்தை மீறப் போகின்றோமென்றால் அது பற்றி நேர காலத்துடன் அரசாங்கத்துக்கு அறிவித்துவிட்டுத் தான் செய்வோம். மூடிவைத்து எதையும் நாங்கள் செய்யமாட்டோம். எங்களை சிறையில் தள்ளுவதானாலும் உங்களுக்கு சிரமம் வைக்கமாட்டோம்."

— நாடாளுமன்றத்தில் வி. தர்மலிங்கம் ( 5-4-72 )

## சோசலிசமாம் சோசலிசம்..!

தேசிய அரசாங்கத்தின் காலத்தில் காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கு பல இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு வேலையும் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய கூட்டணி அரசு பதவியில் அமர்ந்ததும் துறைமுக அபிவிருத்தி கைவிடப்பட்டது! திட்டமிட்டபடி துறைமுக அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றிருந்தால் குறைந்தது 5000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்திருக்கும்!

பல இலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட கச்சாய் உப்பள வேலைகள் கூட்டணி அரசால் நிறுத்தப்பட்டிருக்கிறது. உப்பள வேலைகளுக்காக செலவுசெய்யப்பட்ட பல இலட்ச ரூபா வேலைகள் நாசமடையும் நிலையில் உள்ளன. உப்பள வேலைகள் தொடர்ந்து நடைபெற்றிருந்தால், தமிழ் இலங்கையின் பொருளாதாரம் வளர்ந்திருக்கும்.

மயிலிட்டியிலும் தொண்டைமானாறிலும் தேசிய அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுக வேலைகளையும் இன்றைய அரசு நிறுத்திவிட்டது. இந்தத் துறைமுகங்கள் நடைமுறைக்கு வருமானால், தமிழ் மீனவர்களின் வாழ்க்கை நிலை உயர்ந்திருக்கும்!

வல்லிபுரக் கோவில் போன்ற மணல் அதிகமுள்ள இடங்களில் கண்ணாடித் தொழிற்சாலை ஆரம்பிக்குமபடி நாம் பல தடவைகள் கேட்டும் ஆட்சியாளர்கள் பாராமுகமாக இருக்கிறார்கள்.

இப்படி தமிழ் மக்களையும், தமிழ் ஈழத்தின் பொருளாதார உயர்வையும், புறக்கணித்துக்கொண்டு சோசலிசம் பேசும் கூட்டணியினரே சோசலிசம் பேச உங்களுக்கு என்ன யோக்கியதை!

—நாவலர் அமிர்தலிங்கம் (மாசியப்பிட்டி கூட்டத்தில்)

## வாழ்க மணமக்கள்

பழம் பெரும் தமிழரசுவாதியும் கட்சியின் பொதுக் குழு உறுப்பினருமான கன்றுலை தொந்தாரிஸ் பொ. வி. கந்தையா ஜே. பி. அவர்களுடைய ஒரே மகள் திருநிறைச் செல்வி டாக்டர் காந்திமதிக்கும் டாக்டர் கே. ஜெகதீசன் அவர்களுக்கும் 3-4-72 நீர்வேலி நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் திருமணம் வெகு சிறப்புடன் நடைபெற்றது.

புதுமண மக்களுக்கு எமது இதய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.

### அரசியல் சட்டத்துக்கு கிளிநொச்சி பட்டினசபை எதிர்ப்பு!

புதிய அரசியல் சாசனத்தில் கையெழுத்திட வேண்டாமென கிளிநொச்சி பா. உ. திரு. வீ. ஆனந்தசங்கரி உட்பட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் பா. உ. கள் சகலரையும் கோரும் தீர்மானமொன்றைக் கிளிநொச்சிப் பட்டினசபை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

பட்டினசபையின் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது, நாலாம் வட்டார உறுப்பினர் திரு. இ. நடராசா இப்பிரேரணையைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார். மூன்றாம் வட்டார உறுப்பினர் திரு. இ. கிருஷ்ணராசா ஆமோதித்தார்.

"புதிய அரசியல் சாசனம் தமிழர்களுக்கும் அவர்கள் சமயமான சைவத்துக்கும், கலை, கலாசாரம் ஆகியவற்றுக்கும் சாவுமணி அடிப்பதாக உள்ளது. எனவே அச்சாசனத்தில் கையெழுத்திட வேண்டாமெனப் பொதுவாக வடக்குக் கிழக்கு மாகாணங்களின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், குறிப்பாகக் கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரியையும் இச்சபை கோருகிறது." என அப்பிரேரணையிற் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

—

### அரசியல் சட்டத்தை புத்தூர் கி. ச. நிராகரித்தது!

"புதிய அரசமைப்புச் சட்டத்தில் சிங்களமொழிக்கும், பௌத்தமதத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள உரிய இடம் தமிழ் மொழிக்கும் மற்றும் மதங்களுக்கும் அளிக்கப்படாமையும், இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களை வேண்டுமென்றே இரண்டாந்தரப் பிரசைகளாக்கும் இச்செய்கைகளையும், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாக இருந்த 29வது சரத்தை நீக்கியதுடன், புதிய அரசமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையினத்தின் சகல உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதால், புதிய அரசமைப்புச் சட்டத்தை இச் சபை வன்மையாக எதிர்க்கின்றதெனவும் கௌரவ பிரதம மந்திரி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதெனவும், இத் தீர்மானத்தின் பிரதிகளை சகல தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்ப வேண்டுமெனவும், புத்தூர் கிராம சபையின் மாதாந்த கூட்டத்தில் திரு. க. சின்னத்துரை அவர்கள் பிரேரிக்க, திரு. வ. பொன்னம்பலம் அவர்கள் ஆமோதிக்க சபை ஏகமனதாக அங்கீகரித்தது.

—

### சிங்கள ஆசிரியருக்கு எதிர்ப்பு

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் சிங்கள ஆசிரியர் ஒருவரை நியமிப்பதற்கு மேற்படி மகாவித்தியாலய அதிபரும் வேறு சில ஆசிரியர்களும் [illegible] சூழ்ச்சியை பெற்றோர்கள் அடிமையாக [illegible]த்துள்ளனர். தங்கள் விருப்பமின்றி சிங்கள ஆசிரியர் நியமிக்கப்படக் கூடாதென பெற்றோர்கள் திட்டவட்டமாக அதிபரிடம் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பிரமணியத்துக்குச் சிறுபான்மைத் தமிழர் பகிரங்கக் கடிதம்

ஐந்தரை லட்சம் சிறுபான்மைத் தமிழரின் தனித்தலைவன் நான் என்று கூறும் எம். சி. சுப்பிரமணியம் அவர்களே! நீர் இன்று சிறுபான்மை தமிழினத்துக்காக சாதித்தது இந்த தவறான முறை ஒன்றுதானா? உம்மை சிறுபான்மைத்தமிழரின் தனித்தலைவன் என்று யாரேற்றுக்கொண்டது? ஒரு முறை வாக்கெடுப்புக்கு விட்டுப் பார்ப்போமா? ஒரு லட்சம் சிறுபான்மைத் தமிழ் மக்கள் தானும் ஏற்றுக் கொள்கிறார்களா என்பதைப் பார்ப்போம்.

தமிழரசார் அரசாங்கத்தை எவ்வளவு கடுமையாக எதிர்க்கிறார்களோ அவ்வளவு எமக்கு நல்லது என்று இப்போது கூறித்திரிகிறீராம். அப்படியானால் தமிழரசாரின் எதிர்ப்பை பயன் படுத்தி உமக்கு அரசாங்கத்தில் செல்வாக்கை ஏற்படுத்திக் கொள்வதுதான் நோக்கமா? இதைச் சாட்டாக வைத்து அரசியல் பிழைப்பு நடத்துவதுதான் உங்கள் நோக்கமா? சிறுபான்மைத் தமிழரையும் பெரும்பான்மைத் தமிழரையும் பிரித்து ஆள்வதுதான் உங்கள் கொள்கையா? சட்டப்பொம்மனின் எதிர்ப்பினால் எட்டப்பனின் செல்வாக்கு வெள்ளையரிடம் பலகாலம் நீடித்திருக்கவில்லை. மக்களும் எட்டப்பனை தூற்றினார்கள். அவனது புகழ் மங்கியது. அதே போல் தான் உமது கதையும் என்பதை நீர் இன்னும் உணரவில்லையா?

அண்மையில் நடைபெற்ற கல்விறக்கும் தொழிலாளர் சங்க மகாநாட்டில் சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் தலைவரியும் கல்விறங்கும் தொழிலாளர் சங்க பொதுக் காரியதரிசியுமான எஸ். இராசையா அவர்கள் பேசும் போது "இந்த அரசாங்கத்துக்கு களங்கம் ஏற்படுத்தத் தக்க வகையில் நாம் நடக்க மாட்டோம்" என்று கூறினார். அப்படியானால் இந்த அரசாங்கம் பொதுவாகத் தமிழருக்கு மட்டுமல்லாமல் சிறுபான்மைத்தமிழருக்கும், அவர்களது உரிமையை பறித்தால் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்போம் என்ற எண்ணமா? அரசாங்கத்தில் உள்ள மந்திரிமாரின் காலை நக்கி அவர்களின் எச்சிலிலைச் சோற்றை உண்பதுதான் உங்கள் நோக்கம். அப்படித்தானே! சிறுபான்மைத் தமிழினம் எக்கேடு கெட்டாலும் கொட்டும். நமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்து போலி வேஷம் போட்டால் போதும் அதுதானே உங்கள் குறிக்கோள்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் வடமராட்சி கிளைத் தலைவரிடம் மகாசபையில் அங்கத்துவம் இல்லாத ஒரு சிறுபான்மைத் தமிழர் தமக்கு ஒரு உதவி கேட்டபோது அந்தக் கிளைத் தலைவர் இதற்கு மகா சபையில் சேர வேண்டும் என்றும் பின் பொதுச்சபையின் அனுமதியுடன்தான் இதைச் செய்யலாம் என்றும் கூறினார். இதைக்கேட்ட அந்த அன்பர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார் — சிறுபான்மைத் தமிழரல்லாத உயர் சாதி கம்யூனிஸ்ட்டுக்களுக்கு உதவிகள் பல செய்திருக்கிறீர்கள் இவர்களுக்கு மகா சபையில் அங்கத்துவம் இல்லை. ஏனையா நீர் சிறுபான்மைத்தமிழரின் பிரதிநிதியா அல்லது கம்யூனிஸ்ட்டுக்களின் பிரதிநிதியா? நமக்குப் புரியவில்லை.

சிறுபான்மைத் தமிழர் பலர் இத் தவறான திட்டத்துக்காக உமது எம். பி. பதவியை இராஜினாமா செய்யும்படி கேட்டபோது இந்த அரசு 95% வீதம் நம் இனத்தின் பிரச்சினையை தீர்த்திருக்கிறது அதை மறந்து தவறான திட்டம் ஒன்றுக்காக எனது பதவியை விட்டு வெளியேறுவதா என்று கூறுகின்றீர்.

உமக்குத்தெரியாதா சிறுபான்மைத் தமிழரின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு காரணம் இந்த மரவரி முறையினால் தான் என்பது?

துன்னாலை
**தமிழ்ச் செல்வன்**

இத் தவறான திட்டத்தின் கூட்டுறவு முறை நம் இன மக்களின் வாழ்க்கைத் தரத்தை பாதிக்கும் என்றும் இத்திட்டத்தால் பெரும்பான்மை தமிழர்தான் அதிகாரத்தை வைத்திருப்பார்கள் என்றும் நிர்வகிக்கும் பொறுப்பு முழுக்க உயர் சாதியினரிடமே இருக்கும் என்றும் நம்மவர்கள் வெறும் சீவல் தொழிலாளராகவே இருப்பார்களென்றும் இதனால் நம் இன மக்கள் மீண்டும் பழைய நிலைக்கு தள்ளப் படுவார்களென்றும் ஆகவே நமது கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்துடன் சிங்கள மக்களின் ஒன்பது தொழிற் சங்கங்களும் நாற்பது, ஐம்பது சிங்கள பாராளுமன்ற அங்கத்தவர்களும் போராட்டம் நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தருகின்றார்கள். போராடி மீண்டும் மரவரி முறையை கொண்டு வருவோம்—சீவல் தொழிலாளர்கள் சங்கத்தில் அங்கத்தவராக வேண்டும் என்றெல்லாம் முன்பு பிரசாரம் செய்தீர்கள்...!

ஆனால் கடந்த ஒன்பதாம் திகதி என். எம். பெரேராவை சந்தித்த பின் நீங்கள் இங்கே வந்து கூறுவது என்ன? சங்கங்களுக்கு சீவல் தொழிலாளர்கள் பலர் விண்ணப்பித்து விட்டார்கள்—அதனால் என். எம். மறுக்கிறார்; சீவல் தொழிலாளர்கள் சங்கத்தில் சேராவிட்டாலும் நாம் கட்டாயம் மரவரி யொழிப்பை கொண்டு வந்துதான் தீருவோம், என்றும் கூட்டுறவு முறையினால் முதலாளிகளின் சுரண்டல் ஒழியும் என்றும் ஏழைத்தொழிலாளிகளின் வாழ்க்கை வளம் பெறும் என்றும் என். எம். கூறுகிறார்—ஆகவே இது சிறந்த திட்டம் என்றும் பிரசாரம்செய்கிறீர்கள் அடுத்து மது ஒழிப்பு சட்டம் கொண்டு வர மாட்டேன் என்றும் இதற்கென தனி கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி இருக்கிறோம் என்றும் இவை இரண்டையும் சாதித்ததாக பிரசாரம் செய்கிறீர்கள்.

ஏன் உங்களுக்கு இந்தப் புரளி? இந்த இரண்டு திட்டத்தையும் என். எம். ஆரம்பத்திலேயே கூறியிருக்கிறார் அல்லவா? அதை நீங்கள் மறந்து விட்டீர்களா? இத் தவறான திட்டம் கூடாது என்று பிரசாரம் செய்த நீங்கள் அதே திட்டத்துக்கு ஒத்துழைப்பு தருவதாக கூறியிருக்கிறீர்கள்— (ஆதாரம் 10-3-72 வீரகேசரி)

இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு புதிய அரசியல் சாசனத்தில் சம உரிமை கொடுக்கவில்லை என்பது நாடறிந்த விஷயம்—அப்படியிருக்க குடியரசு தினத்தில் கண்டியில் கைச்சாத்திட விருக்கும் அடிமை சாசனத்தில் நீரும் கையொப்பம் வைத்து சிறுபான்மைத் தமிழினத்துக்கு காட்டிக்கொடுத்த இனம் என்ற தீராத வடுவை ஏற்படுத்த போகிறீர்!

ஐயா எம். சி. அவர்களே நான் ஒரு சிறுபான்மைத் தமிழன் என்ற வகையில் உம்மைக்கேட்டுக்கொள்வது நம்மினத்தை காட்டிக் கொடுக்காதீர்! தீராத களங்கத்தை நம் இனத்துக்கு ஏற்படுத்தவேண்டாம். நம் பிற்கால சந்ததியினரின் காட்டிக்கொடுத்த பரம்பரையை சேர்ந்தவர்கள் என்ற வடுவை ஏற்படுத்த வேண்டாம்.

முப்பது காசுக்காகவே யேசுவை காட்டிக்கொடுத்தான் யூதாஸ் அதனால் இன்றைக்கும் அந்த இழுக்கு யூதர்களுக்கு உண்டு. அந்த நிலை நமக்கு வேண்டாம். சிறுபான்மைத் தமிழனும் பெரும்பான்மைத்தமிழனும் வாழப்போவது ஒன்றாகத்தான்—சிங்களவரின் கண்ணோட்டத்தில் தமிழன் எவனாயிருந்தாலும் தமிழன் தமிழனே சிறுபான்மைத் தமிழனும் பெரும்பான்மைத் தமிழனும் வாழ்க்கை முறையில் ஒரே பிணைப்பாகத்தானிருக்கிறான். பெரும்பான்மைத் தமிழனின் ஒற்றுமையின்றி சிறுபான்மைத்தமிழன் முன்னேற முடியாது.

நம்மினத்தின் ஜீவநாடியான சீவல்தொழில் பெரும்பான்மைத் தமிழரின் உதவியினால்தான் வளர்ச்சியடைகிறது என்பதை உணரவில்லையா? வேருடன் பனையின் வேருடன் கெடும் முதுமொழி தெரியாதா? பெரும்பான்மைத் தமிழரிடமிருந்து நம்மவர்களை பிரிக்கும் நீர் சிங்களத் தலைவர்கள்தான் நமது பிரச்சினையை தீர்ப்பார்கள் என்றால் முதலில் சிறுபான்மைத் தமிழரை தமிழ் பகுதியில் வாழவிடாது சிங்களப்பகுதியில் கொண்டு போய் குடியேற்றும்!

தமிழரசுக் கட்சி தீண்டாமை ஒழிப்புக்காக என்ன சாதித்தது என்பது உமக்குத் தெரியும் தானே; 56ம் ஆண்டு வரோதயரும் வன்னியரும் பாராளுமன்றத்தில் தீண்டாமை ஒழிப்பு சட்டத்தை நிறைவேற்றியது தெரியும் தானே [illegible] அரசாங்கத்திலும் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை செயல்படுத்தும் படி டட்லியிடம் தமிழரசார் கேட்டபோது அங்கத்கட்டத்தினார்— இந்த அரசு தீண்டாமை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றிய போது, டட்லியே இதைக் கூறினார் அல்லவா?

சாதியே ஒழிக்கப்பட வேண்டும் என்ற மசோதாவை சுதிரவேற்பிக்கவே அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பித்தபோது அதை எதிர்த்து ஏன் வாக்களித்தீர். தவறான முறையை ஏன் ஆதரித்து வாக்களித்தீர். அப்படியானால் நீர் சிறுபான்மைத் தமிழனுக்காக கண்ணீர் வடிப்பது வெறும் முதலைக் கண்ணீர் தானே!

# 'கருணாநிதி - தமிழர்களின் முஜிபுர்'

கேள்விகளுக்குப் பதிலளிப்பதில் இந்தியாவிலேயே தலை சிறந்தவர் பாபுராவ் பட்டேல் என்பவராவார். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் பற்றிய கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களைத் தொகுத்து வழங்கியுள்ளோம்.



கே: மற்ற முதலமைச்சர்களை விட திரு. கருணாநிதி அவர்களை ஏன் அதிகமாகப் பாராட்டுகிறீர்கள்?

ப: அடுத்தவர்களுக்கு அடிபணியாத அவர் மதி நுட்பத்தை விரும்புகிறேன். நமது துர்கா தேவிக்கு (இந்திரா காந்தி) சரியான சவால் அவர்தான்.

கே: தமிழ்நாட்டின் அடுத்த தேர்தலில் இந்திரா காங்கிரஸ் போட்டியிட்டால்,

ப: இந்திரா காந்திக்கும், கருணாநிதிக்கும் ஒரு குஸ்தி நடக்கும். கண்ணாடிக்காரர் இந்திராவை அடித்துத் தள்ளிவிடுவார் என்றே நான் எண்ணுகிறேன்.

கே: இன்றைய கருணாநிதி யார்?

ப: இந்திராவுக்கு அதை கூறவில் விடத் தகுதியான ஒரே நபர்,

கே: எங்கள் முதலமைச்சர் திரு. கருணாநிதி, நல்ல முதலமைச்சராக உயரக்கூடிய அளவிற்கு வளரவில்லை என நான் கருதுகிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: நமது நாட்டிலேயே துணிவும் திறமையும் உள்ள முதலமைச்சர் எனக் கருதுகிறேன். அவர் மதுவிலக்கை ரத்து செய்தது ஒன்றே, போலிப் புனிதத்தன்மையில் நம்பிக்கை இல்லாதவர் என்பதை உறுதி செய்து விட்டது.

கே: இந்தியாவிலேயே தலை சிறந்த மாநிலம் எது?

ப: தமிழ்நாடுதான். 'சோ' ராஜாஜியைத் தவிர மற்ற எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறார்கள்.

கே: டில்லி வட்டாரத்தில் திரு. கருணாநிதியின் மதிப்பு எப்படியுள்ளது?

ப: இவரால், இந்திரா மிரண்டிருக்கிறார். அச்சமும், மதிப்பும் இணைந்து [illegible]

கே: வாஜ்பாயி சென்னையில் தி. மு. க. வை சாடியுள்ளாரே!

ப: நகருக்கு வரும் பைத்தியங்களைக் கண்டு கருணாநிதி, அனுதாபத்தோடு புன்னகை புரிகிறார்.

கே: திரு. கருணாநிதிக்கு தேர்தலில் எப்படி ஜெயிப்பது என்று தெரிகிறதே!

ப: உண்மைதான் இந்திரா காந்திக்கு உள்ள பெரிய தலைவலியே அவர்தானே!

கே: கருணாநிதி ஒரு ஏமாற்றுக்காரரா?

ப: மதுவிலக்கை ரத்து செய்தது ஏமாற்றுதல் இல்லை.

கே: கருணாநிதி கறுப்புக் கண்ணாடி அணிகிறாரே!

ப: அவர் அரசியலில் ராஜாஜியோடு போட்டியிட வேண்டியிருக்கிறதே;

கே: தி. மு. க. அதிகாரத்துடன் மீண்டும் தமிழ் நாட்டில் ஆட்சியைப் பிடித்துள்ளதே?

ப: தமிழர்கள் கருணாநிதியிடம் ஒரு முஜிபுர் ரகுமானைக் காண்கிறார்கள்.

கே: மதுவிலக்கை ரத்து செய்யும்படி கருணாநிதிக்கு ஆலோசனை கூறினீர்களா?

ப: ஆமாம். ஒரு மோசடியை எத்தனை காலந்தான் நீடிப்பது.

கே: நான் ஏன் இந்தி படிக்க வேண்டும்? என்று [illegible]

ப: சொல்வது சரிதானே! அவர் ஏன் படிக்கவேண்டும்! தமிழ்நாட்டு ஓட்டு வேண்டுமென்றால் இந்திராகாந்தி தான் தமிழ் படிக்க வேண்டும்.

கே: திரு. கருணாநிதி இந்திரா காந்தியிடம் அதிகமாக எதிர்பார்க்கிறாரே;

ப: அவருக்கு அம்மையாரைப் பற்றித் தெரியாது; அதிகமாக நெருக்கினால், பிரதமர் யாகியாகானின் அக்காளாக மாறுவார்;

கே: தமிழ்நாட்டு முதலமைச்சர் கருணாநிதிக்கு, கவர்னர் கே. கே. ஷா, ஒரு தலைவலி என்று சொல்லப் படுகிறதே?

ப: கே. கே. ஷா, நிலைமையை அறிந்தவர். கருணாநிதியோடு, ஒத்துப் போகத் தெரிந்தவர்.

கே: எங்கள் முதலமைச்சர் கருணாநிதிக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

ப: தமிழர்களுக்கு இந்தி கற்றுக் கொடுங்கள். அவர்கள் இந்தியாவை வெல்லட்டும். ஆங்கிலம் கற்றுக் கொடுங்கள். அவர்கள் உலகத்தை வெல்லட்டும். வெறும் தமிழ்த் தக்காளிப் பழங்களாக மட்டும் இருக்க வேண்டாம்.

நன்றி: மதர் இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து கலாசார நிலையத்தை கொழும்பில் நிறுவாதீர்!

## நாலு இலட்சம் ரூபாவை நாசமாக்காதீர்!

### 'புத்தகச் செல்வர்' பத்மநாதன் சொல்கிறார்

"கொழும்பு பார்சன் வீதியில் நாலு இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட உள்ள இந்து கலாசார நிலையத்தை திருகோணமலையிலோ வவுனியாவிலோ யாழ்ப்பாணத்திலோ அல்லது மட்டக்களப்பிலோ நிறுவுதல் வேண்டும். கதிர்காமத்தில் இருந்த இராமகிருஷ்ண மிசன் மடத்துக்கும் இரத்மலானை இந்துக் கல்லூரிக்கும் ஏற்பட்ட கதியே கொழும்பின் அமையும் இந்து கலாசார நிலையக்கட்டிடத்துக்கும் ஏற்படும்"

இவ்வாறு இலங்கையின் முக்கிய இந்து சமயப் பிரமுகர்களில் ஒருவரும் ரகுநாதன் பதிப்பக உரிமையாளருமான புத்தகச் செல்வர் பத்மநாதன் அவர்கள் சுதந்திரனுக்கு விடுத்துள்ள விசேட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார். அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஏராளமான தமிழர்களின் பணத்தில் கட்டப்பட்ட கதிர்காமம் இராமகிருஷ்ண மடத்தை அரசாங்கம் சுவீகரித்து விட்டது. கொழும்பு வாழ் தமிழரின் உழைப்பில் உருவான இரத்மலானை இந்துக் கல்லூரியையும் அரசாங்கம் சுவீகரித்துவிட்டது. கொழும்பில் இப்போது நாலு இலட்சம் ரூபா செலவில் மிகப்பெரிய இந்துக் கலாசார நிலையம் ஒன்றினை நிறுவும் முயற்சி நடைபெறுகிறது. இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களை நான் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன் 'தயவுசெய்து உங்கள் முயற்சியைக் கைவிடுங்கள்! தமிழர் பிரதேசமான வடக்கிலோ கிழக்கிலோ இந்து கலாசார நிலையத்தை நிறுவுங்கள்!"



"திருக்கோணமலை புராதன சைவ சமயப் பெருமை கொண்ட புண்ணிய பூமி! ஏழாம் நூற்றாண்டில் பாடல் பெற்ற பழம்பதி. இராவணன் கால முதல் இந்து சமயம் வாழ்ந்து வரும் சைவத் திரு நிலம். கோணேஸ்வரர் குடிகொண்ட கோயில் தலம். அங்கே இந்து கலாசார நிலையத்தை நிறுவுதலே நலம். இல்லையேல் யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீசுரம் முனீஸ்வரம் போகிறவர்களோ, மட்டுநகர் திருமலையில் இருந்து நல்லூர் செல்வச் சந்நிதி போகிறவர்களோ யாத்திரை செல்லும் வழியில் அமைந்த வவுனியாவில் இந்து கலாசார நிலையத்தை நிறுவலாம்; அல்லது சைவத் திருத்தலங்கள் நிறைந்த யாழ்ப்பாணத்திலோ — இதிகாச காலப் பெருமை கொண்ட மாமாங்கேஸ்வரர் ஆலயம் அமைந்த மட்டுநகரிலோ இந்து கலாசார நிலையத்தை அமைக்கலாம்.

இவ்வாறு புத்தகச் செல்வர் பத்மநாதன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## வி. பி. யின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரசாங்கத்தின் பிரதமர் உட்பட பல அமைச்சர்கள் இன்று ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளிலேயே ஆர்வம் காட்டுகிறார்கள்—தொடர்பு கொள்ளுகிறார்கள்.

"இந்த அரசாங்கம் ஒரு அமைச்சருக்கு நான்கு பதவிகளை கொடுப்பதன் மூலம் தான் வேலை இல்லாத்திண்டாட்டத்தை நீக்கி இருக்கிறார்கள்—பொதுத்தேர்தலில் வாக்களித்த மக்களை மறப்பது ஒரு அரசாங்கத்துக்கு முறையல்ல—"

—இவ்வாறு வி. பொன்னம்பலமும் பீட்டர் கெனமனும் வக்காலத்து வாங்கும் கூட்டணி அரசு பற்றி விமர்சித்திருக்கிறார் அவர்களது தலைவராகிய கொம்யூனிஸ்ட் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா. சோவலுவை அரசவை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (ஆதாரம் 31-3-72 'சன்')

## அரசியல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணியில் எத்தகைய இன்னலை ஏற்கவும் தயாராக இருக்கிறோம்."

—இவ்வாறு வவுனியா பா. உ. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு சுதந்திரனுக்களித்த பேட்டியொன்றில் தமக்கே யுரிய சிம்மக்குரலில் தெரிவித்தார்.

## இவர் ஒரு சோசலிஸ்டா? காட்டுமிராண்டியா?

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் பயிலும் ஒரு மாணவன் மயக்கமடைந்து மூர்ச்சித்து விழும் வரை கல்லூரியில் வைத்து மிருகத்தனமாக அடித்து உதைக்கப்பட்டதாகத் தெரிகிறது! இந்தக் கைங்கரியத்தை செய்தவர் மகாஜனக் கல்லூரியில் படிப்பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஒரு ஆசிரியராம்! சோசலிசம் பேசும் இந்த ஆசிரியரே இந்தக் காட்டு மிராண்டித்தனத்தில் ஈடுபட்டுள்ளார்.

இத்தகைய அம்மாணவன் எந்தக்குற்றமும் செய்யவில்லையாம். ஆளும் கட்சியின் ஆதரவாளராக தாம் இருப்பதால், தம்மை என்ன செய்ய முடியும் என்ற நினைவில் இந்த ஆசிரியர் வெறி பிடித்து அம்மாணவனைத் தாக்கியுள்ளாராம்.

இது பற்றி அக்கல்லூரியின் பெற்றோர்கள் நடவடிக்கை யெடுத்து வருவதாகத் தெரிகிறது.

கருணையே வடிவானவன் முருகன். அந்த முருகனின் பெயரைச் சுமந்து கொண்டிருக்கும் இந்த ஆசிரியரிடம் கருணை கடுகளவும் இல்லாமல் போய் விட்டதா? என பெற்றோர்கள் கேட்கிறார்கள்.

## தமிழரசுக் கட்சிக்கு தினபதியார் பாராட்டு!

"தனிமனிதருக்காகவோ அன்றி ஒரு சில தலைவர்களுக்கு பதவி கிடைக்கவேண்டும் அதைக்கொண்டு அவர்கள் அரசியல் பிழைப்பு நடத்த வேண்டும் என்பதற்காகவோ தமிழரசுக் கட்சி இயங்கவில்லை.

"தமிழ் பேசும் மக்கள் அனைவரது நலனுக்குமாகவே தமிழரசுக்கட்சி இயங்குகிறது — தமிழ் பேசும் மக்களின் நலனுக்கு பாதகமாக கட்சித் தலைவர்களில் எவர் நடந்தாலும் அவர் குற்றவாளிக்கூண்டில் ஏற்றப்பட்டு விசாரிக்கப்பட்டே தீருவார்.

குற்றம் புரிந்தவர் குருவாக இருந்தாலும் சரி சிஷ்யராக இருந்தாலும் சரி, ஜனநாயக ரீதியில் இயங்கும் தமிழரசுக் கட்சியில் அவருக்கு மன்னிப்புக் கிடையாது.

"கட்சியின் தனிப்பெருந் தலைவரானாலும் சரி கட்சியை செயற்படவைக்கும் பொறுப்பை ஏற்கும் பொதுச் செயலாளரானாலும் சரி — எவர் தவறு நடந்தாலும் அவர் தட்டிக் கேட்கப்படுவார்! கண்டிக்கவும் படுவார்."

— இவ்வாறு தமிழரசுக் கட்சியைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்து பாராட்டி யெழுதியிருக்கிறார் தினபதியார் ஏப்ரல் நான்காந்திகதிய தமது தினபதி ஏட்டில்.

குறிப்பு:— இப்படி நாம் எழுதவில்லையென்றும் தமிழரசு செயற்குழு உறுப்பினர் ஒருவரே கூறியதாகவும் தினபதியார் கூறுவாரானால் — அவருக்கு நாம் சவால்விடுகிறோம் — அந்த குறிப்பிட்ட செயற்குழு உறுப்பினர் யார் என்பதை தைரியமாக வெளியிடட்டும். திராணியிருந்தால், தெம்பிருந்தால், அந்தரங்க சுத்தியிருந்தால் தினபதியார் நமது சவாலை ஏற்கட்டும்!

## நினைவு மலர்

கடந்த 11-3-72ல் எம்மை விட்டுப் பிரிந்துவிட்ட எமது தந்தையாரான சின்னப்பு—கணபதிப்பிள்ளை அவர்களது ஞாபகார்த்தமாக கவிஞர் 'வல்லியூர்க்கவிராயர்' அவர்களினால் ஆக்கப் பெற்ற நினைவு மலரினை எதிர்வரும் 10-4-72 திங்கட்கிழமை நண்பகல் அடலேறு மூ: ஆலாலசுந்தரம் அவர்கள் எமதில்லத்தில் வைத்து வெளியிட்டு வைப்பார்கள். குறித்த வைபவத்தில் உறவினர்கள், நண்பர்கள் கட்சிப் பிரமுகர்கள், அனைவரையும் கலந்துகொண்டு நிகழ்ச்சியினை சிறப்பிக்கும் வண்ணம் மிகப்பணிவுடன் அழைக்கின்றோம்.

—இவ்வாறு காரைக்காட்டு வீதி, வண்ணார்பண்ணை வடமேற்கைச்சேர்ந்த தமிழரசுத் தோழர் திரு: கி. க. சண்முகநாதன் கேட்டுக் கொள்கிறார்.

## தனி மாநில...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரவு தெரிவித்து லண்டனில் தமிழ்த்திரைப்பட கலாசார சங்கத் தலைவரும் மற்றும் வட இங்கிலாந்தின் தமிழ் மாணவர் குழுவினரும் தமிழரசுக் குழுவினருக்கு தந்திகள் அனுப்பியுள்ளனர்."

—இவ்வாறு 'லண்டன் முரசு' செய்தி கூறுகிறது. தமிழ்நாட்டுக்கு சென்றிருந்தபோது தந்தை செல்வா வெளியிட்ட கருத்துக்களுக்கு முதல் முக்கியத்துவம் கொடுத்து லண்டன் முரசு பிரசுரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. 'இந்து' ஏட்டில் வெளிவந்த செய்தியை லண்டன் முரசு மறுபிரசுரம் செய்துள்ளது.

## கற்குடா தொகுதியில் சிங்கள குடியேற்றம்

கற்குடா தொகுதியில் உன்னவட முனை குடியேற்றத் திட்டத்தில் சிங்களக் குடும்பங்கள் குடியேறி இருக்கின்றார்கள். இக்குடியேற்றம் ஒரு சிங்கள பிக்குவினால் திட்டமிடப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இக் குடியேற்றத்திற்கு அரசியல் வாதிகளும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் உடந்தையாம் என அறியப்படுகின்றது.

## இனசங்காரத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரர்கள் நீங்கள் தான்! நாங்கள் அல்ல. இந்நாட்டிலே பலாத்காரத்தை கடந்த கால்நூற்றாண்டுக்கு மேலாக தூவி வந்தவர்கள் நீங்கள்தான்; நாங்கள் அல்ல! இரத்தப் புரட்சி, என்று பேசி வந்தவர்கள் நீங்கள்தான் — நாங்கள் அல்ல; அஹிம்சைப்போராட்டத்தை 'சப்பாணிப்போர்' என்று கிண்டல் செய்தவர்களும் நீங்கள்தான், நாங்கள் அல்ல—

நாங்கள்—இலங்கைத் தமிழரசுக்கட்சியினராகிய நாங்கள் — அஹிம்சையிலேயே முழுக்க முழுக்க நம்பிக்கை கொண்டவர்கள் — அஹிம்சையையே எங்கள் அரசியல் வாழ்வின் ஆதாரமாக ஏற்றுக்கொண்டிருப்பவர்கள். அறப்போராட்டம் ஒன்றின் மூலமே நாம் எங்கள் இலட்சியத்தை வென்றெடுப்போம் என்பதில் பரிபூரண நம்பிக்கை கொண்டவர்கள்! அறப்போரை நீங்கள் 'சப்பாணிப்போர்' என்று கிண்டல் செய்தாலும் அறவழியை நாங்கள் ஒருபோதும் கைவிடமாட்டோம்!

நீங்கள் எங்களைப் பார்த்து 'வன்முறை' 'பயங்கரம்' என்றெல்லாம் கத்துகிறீர்கள் என்றால் உங்களுக்குத்தான் ஏதோ கோளாறு ஏற்பட்டுள்ளதென்று அர்த்தம். இந்நாட்டின் தமிழனுக்கு அரசுடன் சேர்ந்து நீங்கள் இழைத்து வரும் கொடுமைகள் உங்கள் மனச்சாட்சியை குத்திக்குடைகிறது- அதனால்தான் இப்படி குய்யோமுறையோ என்று கத்துகிறீர்கள்!!

தெருவில் செல்லும் பைத்தியக்காரர்கள் போல கத்தாதீர்கள்! நெஞ்சில் உரமிருந்தால்— நேர்மைத் திறனிருந்தால்—நீங்கள் உண்மையான கொம்யூனிஸ்டுகளாக இருந்தால் தமிழினத்தின் சுயநிர்ணயக் கோரிக்கையை அங்கீகரிக்க முன் வாருங்கள்!

நீங்கள் எங்களைப் பலாத்கார வாதிகள் என்பதால், நாம் பலாத்கார வாதிகளாகி விடவும் மாட்டோம்— அதே நேரத்தில் அச்சுறுத்தல்களுக்குப் பயந்து ஏற்றுக்கொண்ட இலட்சியத்திலிருந்து இம்மியும் விலகிச் செல்லமாட்டோம்! இதைப் புரிந்துகொள்ளுங்கள்!!

## சோசலிசமாம் சோசலிசம்!

'பெல்ட்டை' இறுக்கிக் கட்டுங்கள்; சிக்கனமாக வாழுங்கள் என்கிறார்கள் அமைச்சர்கள். ஆனால் அவர்களோ ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி என்பது போல் வெளிநாடுகளுக்கு உல்லாசப்பயணம் போகிறார்கள்.

அமைச்சர்கள் கொல்வின் ஆர். டி. சில்வா, டீ: பீ: இலங்கரத்தின, டாக்டர் என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் ஆகிய 4 அமைச்சர்கள் வெளிநாடுகளுக்கு இந்த வாரம் பறந்து போயிருக்கிறார்கள். இது தவிர 15 பா: உ. க்களும் வெளிநாடு செல்கிறார்கள்!

இதெல்லாம் யார் பணத்தில் என்கிறீர்களா? இதற்குப் பெயர்தான் சிக்கனமா என்று கேட்கிறீர்கள்?

மூச்...இதற்கு பெயர்தான் சோசலிசமாம்!!

## 'லேட்' ஆனகாரணம்!

ஒருவர்:- ஏன் சார், மார்ச் 18ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் சம்பந்தப்பட்ட பொய்ச் செய்தியை வெளியிட தினபதிக்கு 17 நாட்கள் (ஏப்ரல் 4 வரை) பிடித்ததே இதுதான் அந்தப் பத்திரிகை செய்தியை முந்தித்தரும் இலட்சணமோ?

மற்றவர்:- உங்களுக்குத் தெரியாதா? தமிழரசுக்கட்சி பற்றி பொய்யும் புழுகும் இல்லாததும் பொல்லாததும் வைத்து கட்டுக்கதைகளை தினபதி அலுவலகத்திலேயே உருவாக்குபவர் குறிப்பிட்ட அந்தப் பதினேழு நாட்களும் நோய்ப்படுக்கையில் கிடந்தாராம்! அதனால்தானும் இந்த 'லேட்'!

## அர்ச். மிக்கேல் கல்லூரி மாணவர் தமிழுணர்ச்சி!

மட்டக்களப்பின் பழம்பெரும் ஆங்கிலப்பாடசாலையான அர்ச் மிக்கேல் கல்லூரியின் ஒரு விஞ்ஞான மன்றம் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இதன் கூட்ட நடவடிக்கைகள் முழுக்கமுழுக்க ஆங்கிலத்திலேயே நடைபெற்றுவந்தது. இதை தமிழில் நடத்தவேண்டுமென்று மாணவர்கள் அதிகார பீடத்தை வற்புறுத்தியதன் பேரில் இரண்டு மொழிகளிலும் நடாத்த உத்தரவு கிடைத்தது. அந்த உத்தரவும் திருப்தியில்லையென்று துடிப்புள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து தீவிர முயற்சிகளில் இறங்கினார்கள். கடைசியாக சென்ற பங்குனி மாதம் 16 ம் திகதி வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மொழியில் நடாத்தும் படி உத்தரவு கிடைத்துள்ளது.


யோகக்கலை

"எல்லோரும் இன்புற்றிருப்பது மல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே."

தாயுமானவர்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

15 மில்க் வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி யோகக்கலை என்னும் சிறந்த புத்தகத்தை வாங்கிப் படியுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டியில் தமிழ்பெண்களுக்கு அவமரியாதை!

மலையகத்தின் தலைநகர மென்று வர்ணிக்கப்படும் கண்டி நகர் இப்போது மலையகத்தின் தலைநரகமாக மாறி வருகின்றதென்றுற் கூடப் பொருந்தும்.

பெண்ணரசு புரியும் ஒரு நாட்டில் கேவலம் பெண்மைக்கு மரியாதை கிடையாது. சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப் படுவதற்காகப் பாடுபடுகின்றோம் என்று பேசப்படுகின்றது. ஆனால் சட்டமும் ஒழுங்கும் கட்டுப்பாடும் கண்ணியமும் எங்கே காணப்படுகின்றன?

## கள்ளத்தோணி என்று இகழப்படுவதை தாய்க்குலம் இனியும் பொறுக்காது!

கண்டியில் தமிழ்த் தாய்க் குலத்திற்கு அலமானம் இழைக்கப்படுகின்றது! கண்டி மார்க்கட்டுக்குத் தமிழ்த் தாய்மார்கள் நெற்றியில் திலகமிட்டுக்கொண்டு போக முடியாது, மார்க்கட் வியாபாரிகளால், அங்காடிகளால் 'பொட்டு வைத்துப் போர பொண்ணே' என்று பாட்டுப் பாடிக் கிண்டல் செய்யப்படுகின்றனர். பொட்டு வைப்பது (திலகம்) தமிழர்களின் பண்பாடு அல்லவா?

பொட்டு வைப்பதும், காலில் மிஞ்சி அணிவதும், பாதசரம் பூணுவதும் சடைக் குஞ்சம் கட்டுவதும் நாங்கள் ஏனையோரைப்போல காப்பியடித்துக் கொண்டதல்ல. தமிழர்களாகிய எங்களைப் பார்த்துத்தான் அத்தனையும் அணிகின்றார்கள் மற்றைய இனத்தினர்.

அடுத்துத் தமிழ்ப் பெண்கள் அன்றாடம் சமையலுக்குத் தேவையான மரக்கறி வகைகள், தேங்காய், பழங்கள் போன்றவற்றை வாங்கி வரச் செல்வது வழக்கம் தானே? கத்தரிக்காய் விலையென்ன என்று கேட்டு எடுத்துப் பார்த்துவிட்டு அவைகள் நல்லதாக இராவிட்டால் வேண்டாம் அவைகள் பூச்சி பிடித்தவைகளாக இருக்கின்றன என்று கூறினால், தன்னுடைய வாங்கக் கள்ளத் தோணியில் இந்தியாவுக்குப் போங்கள் என்று ஒரு கிண்டலும், பூச்சிக் கத்தரிக்காயாக இருக்கிறது என்று கூறினால் உங்கள் வயிற்றிலும் பூச்சி இருக்குதானே என்றும் ஒரு கிண்டல்!

இப்படியாகத் தமிழ்த் தாய்மார்களைக் கேலியும் கிண்டலும் செய்வதற்குக் காரணம் யாதோ? தமிழர்கள் என்ற ஒரே காரணமா? அல்லது மிருகத்தனமான துவேச உணர்ச்சியா இது? நாங்கள் இதைக் கேட்கும் பொழுது துவேசத்தைக் கிளப்ப வரவில்லை; நாங்கள் தாய்க்குலத்தினர், வாடிக்கையாளர்கள், நாங்கள் சாமான்கள் வாங்க வரும் பொழுது எங்களிடம் மரியாதையாகவும் கண்ணியமாகவும் நடந்து கொள்ள வேண்டுமென எச்சரிக்கின்றோம். எங்களை யாழ்ப்பாணத்தவர்கள் என்றும் கள்ளத் தோணிகள் என்றும் கிண்டலும் கேலியும் செய்யப்படுவதானும் இனிமேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

கேவலம், பெண்மையின் ஆட்சியிலே பெண்களாகிய எங்களுக்குச் சிறுமை. கண்டி மார்க்கட்டிலே வியாபாரிகளாலும், அங்காடிகளாலும் (எங்களைத்) தமிழ்த் தாய்க்குலத்தைக் கண்ணியமாக மரியாதையாக மதிக்கப்பட வேண்டிய தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், இப்படியான துன்புறுத்தல் கவலிருந்து தமிழ்த் தாய்மார்களுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கப்பட வேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கின்றோம்.

நாங்களும் மனிதர்கள் தான் என்ற முறையிலே மனித தர்மத்தின் பேரால் கண்டி மார்க்கட்டுக்கு வருகை தரும் ஆயிரமாயிரம் தமிழ்த் தாய்மார்களின் பெயரால் இப்படிக் கேட்டுக் கொள்கின்றோம்.

**சிவபாக்கியம் குமாரவேல்**
**தலைவி: மலையக மங்கையர் கழகம்**

# இஸ்லாமிய தமிழர் இயக்கம்

மதத்தால் வேறுபட்டிருந்தாலும் இனத்தால் முஸ்லிம்களும் தமிழர்களே என்கின்ற கருத்து, இந்நாட்டு இஸ்லாமிய இளைஞர்களிடையே குறிப்பாக கிழக்கு மாகாண இஸ்லாமியரிடையே மீண்டும் பற்றிப்பிடித்து, தமிழின உணர்வை தட்டி யெழுப்பி வருகிறது. மொழியுணர்ச்சி, இன உணர்ச்சியில் யாருக்கும் சளைக்காத இஸ்லாமியர்கள் தங்களை தமிழர்கள் என்று கூறிக் கொள்கிறார்களே தவிர "முஸ்லிம்கள்" என்று கூறிக் கொள்வதில்லை;

தமிழை மட்டும் படித்து, தமிழை மட்டும் பேசி, தமிழ் வாழ்வு வாழ்ந்து வருகிறவர்கள் இஸ்லாமியர்கள். அவர்கள் தமிழர்கள் இல்லா விட்டால், வேறு யார் தமிழர்களாக இருக்க முடியும்?

இஸ்லாமியத் தமிழர்களையும் ஏனைய தமிழர்களையும் வேறுபடுத்தி, பிரித்து வைத்திருந்த சுயநலவாதிகள் விரட்டியடிக்கப்பட்டு விடுவார்கள். இஸ்லாமியத் தமிழர்கள் இன்று இன உணர்ச்சி கொண்டு வீறு பெற்றெழுந்துள்ளனர்.

மலேசியாவில் வாழுகின்ற தமிழ் முஸ்லிம்களில் ஒரு சாரார் தங்களை "சோலியா" முஸ்லிம்கள் என்று அழைத்துக் கொள்ளுகின்றனர். "சோலியா" முஸ்லிம்கள் தங்களைச்சோழ வம்சத்தினர் என்று பெருமையுடன் கூறிவருகின்றனர். முன்பு பிரதமராகஇருந்த துங்கு அப்துல் ரகுமான் தன்னை ஒரு சோழ இளவரசர் என்று பெருமையுடன் கூறுவாராம்.

இப்படி மலேசியாவில் வாழும் முஸ்லிம்களே தங்களைத் தமிழர்கள் என்று பெருமையுடன் அழைத்துக் கொள்ளும்போது — தமிழ் மேலே வளர்ந்த இந்நாட்டு முஸ்லிம்கள் மட்டும் இன உணர்ச்சியில் குறைந்து போய் விடுபவர்களா என்ன?

நடிக நண்பர் கலைச்செல்வன் அவர்கள் துடிப்பு மிக்க இளைஞர். கவியால் அன்னைத் தமிழ் வளர்க்கும் கலைஞர். தமிழினப் பாசமும், மொழிப் பற்றும் நிரம்பப்பெற்றவர். தன்னை ஒரு தமிழர் என்றே பெருமிதத்துடன் கூறுபவர் அவர்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அவரது புதிய நாடகமான 'ஒரு மனிதன் —இரு உலகம்' துவக்க விழாவின்போது அவர் உணர்ச்சி பொங்கக் கூறினார்—

'நான் இனத்தாலும் மொழியாலும், வாழ்க்கை முறையாலும் தமிழன்!''

—இப்படிப்பட்ட மொழி, இன உணர்ச்சி, விடுதலை வேட்கை நமது இஸ்லாமியத் தமிழ் இளைஞரிடையே புதிய வேகம் பெறவேண்டும்!

ஃ ஃ ஃ

சின்ன ஆலிம் இல்லம் சம்மாந்துறையிலிருந்து மன்சூர். ஏ. காதர் என்னும் இஸ்லாமிய நண்பர் பின் வருமாறு எழுதுகிறார்:-

"அன்பின் சுதந்திரன் ஆசிரிய; தங்கள் பத்திரிகைக்கு அடியேன் அனுப்பும் முதற்கவிதை இதுவே! சரன் வதித்தரவை வைத்து வெண்பா உருவில் பாடியுள்ளேன் ஏற்றிடுவீர்!

தமிழ்ப்பேசும் மக்களின் நலனுக்காகப்பாடுபடும் உங்கள் போன்ற இயக்கங்கள் இன்றேல் இலங்கையில் தமிழ் நிலைக்காது என்பதில் ஐயமில்லை;

நாம் அனைவரும் மொழியால்—நாட்டால் ஒன்று பட்டோர்களே! யாம் உங்களுக்குப் பக்கபலமே! வாழ்க சுதந்திரன்! ஒளிர்க இன உணர்ச்சி! வளர்க அதன் சேவை! ஓங்குக தமிழ்மொழி! வெல்க அதன் போராட்டம்''

அவர் அனுப்பியுள்ள கவிதை வருமாறு:—

## கண்ணே விழி!

(சம்மாந்துறை; மன்சூர் ஏ. காதர்)

வாழைக்குருத்தே வண்ணத்திப் பூச்சி(இ)றகே!
தாழைமலரே மதயலே — ஏழை
கண்ணொளியே செல்வக் காரிகையே பெண்ணே
விண்ணொளியே கண்ணே விழி!

செந்நெற்குலையே சீர்மாதுளங்கனியே
கன்னலுக்கிணைந்த கனியமுதே—இன்னும்
என்னமோ கொண்ட என்னைப் புரிந்தால்
பெண்ணே கண்ணே விழி!

தக்காளிப் பழமே தளிர்மாங்குருத்தழகே!
பக்காளி கொட்டிப் பழியாமல்—எக்காலும்
உன்னை விரும்பி உவந்து கிடக்கின்றேன்
பெண்ணே கண்ணே விழி!

செவ்விளநீர்க் குலையே செங்காந்தள் தங்கையே!
கொவ்வைப் பழமே குலமகளே—ஔவை
தன்கண்ட செந்தமிழே காரே கனியமுதே
விண்கண்ட பெண்ணே விழி!

மேகமே கார்மழையே விண்ணூர் குலமகளே!
தாகமே யுத்தேன் தங்கையே—மேகம்
கொட்டும் மழையே கொடிமுந்திரிப்பழமே!
விட்டலாப் பெண்ணே விழி!

அல்லும் பகலும் அலைந்தேனுனைத்தேடி
கல்லாயிருந்தாய் கற்கண்டே—சொல்லின்
செல்வமே தாயே செந்நீர்க்கலை மகளே!
வெல்லமே கண்ணே விழி!

குயிலே குரங்களகே கோலைக் கனியிதழே!
மயிலே அழகின் மார்பகமே!—ஒயிலே
சித்தமே கொண்டேன் செல்வமே கலையுடைய
முத்தமிழே கண்ணே முழி!

காலையிளஞ் சூரியனே கற்கண்டே வெண்ணிலவே
சோலைக்கிளியே செவ்வரியே—மாலை
கண்தெரியா இருள் தன்னில் காரிகையே காற்றுகிறேன்
விண்மணியே கண்ணே விழி!

## வாழ்க அந்தப் புண்ணியவான்கள்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் போட முயற்சித்தாலும் இறுதியில் அவை முறியடிக்கப் பட்டு வருவதை எனது வாழ்வில் அனுபவபூர்வமாக நான் அறிந்துகொண்டிருக்கிறேன்.

எனினும், மறுநாள் டிக்கெட் கிடைக்குமா? செல்வாவுடன் செல்லும் வாய்ப்புக் கிடைக்குமா? என்பதைப் பற்றியே சிந்தித்து கொண்டிருந்ததால் 18ம் திகதி இரவு முழுவதும் தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தேன்;

மறுநாள் காலை எட்டு மணிக்கு திரு. நடராசாவுடன் அவரது காரில் பலாலி விமான நிலையம் நோக்கி பறந்து கொண்டிருந்தோம்; எனக்கு ஒரு 'சீட்' எடுப்பதற்காக யார் யாரை எல்லாமோ பிடித்து எப்படியெல்லாமோ முயற்சி செய்து கொண்டிருந்தார் நடராசா. எதுவும் கைகூடுவதாக இல்லை;

விமானத்தில் இடம் இல்லை ஏற்கெனவே 'புக்' பண்ணி விருப்பவர்கள் யாராவது கடைசி நேரத்தில் வராமல் விட்டால் மாத்திரமே இடம் கிடைக்கும் என்று விமான நிலைய அதிகாரிகள் அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டார்கள்;

ஆண்டவனே, யாரையாவது வராமல் செய் — என்று என்னை வழி அனுப்ப வந்திருந்த என் மனைவி ஆண்டவனை நோக்கிப் பிரார்த்திக்க தொடங்கிவிட்டாள்;

திரு. நடராசாவோ, இக்கெட்டும் கையுமாக ஒன்றும் தோன்றாமல் அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தார்;

அதோ, விமானம் வந்து விட்டது! தந்தை செல்வா பரிசோதனைகள் எல்லாம் முடிந்து விமானத்தில் ஏறுவதற்காக காத்துக்கொண்டிருக்கிறார்!

அப்பாவையும், அம்மாவையும் வழி அனுப்ப வந்திருந்த ரவியும், ராஜாவும் (திரு. அமிர்தலிங்கத்தின் பிள்ளைகள்) தாய் தந்தையருக்கு முத்தமிட்டு வழி அனுப்புகிறார்கள்!

பிள்ளைகளைப் பிரியும்போது அக்கா மங்கையர்க்கரசியின் கண்களில் கண்ணீர் முத்துக்கள் திரள்வதைப் பார்க்கிறேன்!

இதோ, அவர்களும் உள்ளே போய் விமானம் ஏறத் தந்தையுடன் காத்திருந்தார்கள்.

நான் வெளியே தவித்துக் கொண்டிருந்தேன்.

ஆகா, என்ன ஆச்சரியம்! எனது மனைவியின் பிரார்த்தனை வீண்போகவில்லை. அன்பர் நடராசாவின் முயற்சி அவமாகவில்லை!

யாரோ இரு புண்ணியவான்கள் அன்று பிரயாணத்துக்காக வந்து சேரவில்லையென்றும் 'சீட்' தரலாமென்றும் கடைசி நேரத்தில் அறிவித்தார் விமான நிலைய அதிகாரி.

'அவர்கள் வாழ்க'! என்று மனத்துள் கூறிக்கொண்டேன்.

"மளமள'வென்று பரிசோதனைகள் முடிந்தன; எங்கள் நால்வரையும் சுமந்து கொண்டு விமானம் திருச்சி நோக்கி கிளம்பியது! என் மனமோ சென்றதடவை சென்றிருந்த போது திருச்சி அறிஞர் சிவநாதம் கூறிய சில விஷயங்களை அசைபோட்டுக்கொண்டிருந்தது;

தொடரும்.

முதலில் தமிழன்—பின்பே இஸ்லாமியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9)

# வாழ்க அந்தப் 'புண்ணிய'வான்கள்!



# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

தந்தை செல்வாவின் தமிழ் நாட்டுப் பயணம் பற்றி இந்நாட்டுத் தினசரிப் பத்திரிகையொன்று அடிக்கடி விடுத்து வரும் கயிறு திரிப்புக்களையும் கட்டுக்கதைகளையும் காணும்போது நானும் ஒரு பத்திரிகைக்காரன் என்ற முறையில் வெட்கத்தால் கூனிக் குறுகிப் போகிறேன்.

என்ன செய்வது......? கண்ணகி பிறந்த நாட்டில்தானே கடைந்தெடுத்த விபச்சாரிகளும் பிறந்து இருக்கிறார்கள்!

பத்திரிகா தர்மம் என்று ஒன்று இருக்கிறது என்பதை மறந்து அந்தப் பத்திரிகை ஆசிரியர் தான்தோன்றித்தனமாக ஏதேதோவெல்லாம் எழுதி வருகிறார்!

பத்திரிகைத் தொழில் என்பது எவ்வளவு பொறுப்புணர்வுடன் கவனிக்கப்பட வேண்டிய புனிதமான தொழில்...! அதுவும் இன்றைய உலகில் பத்திரிகைகள் தாம் மக்களுக்கு உண்மையை எடுத்துரைக்கவேண்டிய ஒரே சாதனமாக விளங்குகின்றன. மக்கள் உலக நடப்பை எடைபோடுவது பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் படித்துத்தான்!

பத்திரிகையின் முதல் கடமை பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதுதான்; ஒரு பத்திரிகையில் வரும் செய்திகளைக்கொண்டு, மக்களே அப்பத்திரிகையைப் பற்றி எடை போட்டு விடுவார்கள்!

நான் மேலே குறிப்பிட்ட தினசரிப் பத்திரிகையைப் பற்றி இப்போது தமிழ் மக்கள் நன்கறிவர். அதில் வரும் செய்திகளை அவர்கள் துளியும் நம்புவதில்லை;

பெரியவரின் தமிழ் நாட்டு பயணம்பற்றி குறிப்பிட்ட தினசரி கட்டிவிட்ட புழுகை எட்டுநாள் கூட அதனால் கட்டிக்காக்க முடியவில்லை — அப்பத்திரிகையின் ஒன்றுக்கொன்று முரண்பட்ட செய்திகளைப் படித்து, மக்களே இன்று தாமாக விமர்சித்து விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்!

"செல்வாவின் தமிழ் நாட்டுப் பயணம் ஏமாற்றத்தில் முடிந்தது — கருணாநிதி கையை விரித்தார் — காமராசர் காணவில்லை; இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் மாநில அரசான தமிழ் நாடு அரசு தலையிட முடியாதென அரசியல் நெறி உரைத்தார் தமிழக முதல்வர்; ஏனைய தலைவர்கள் திரும்பியும் பார்க்க மறுத்தனர்; ஏமாற்றத்துடன் வெறுங்கையுடன் இலங்கை திரும்பினார் செல்வா" — இப்படியெல்லாம் எழுதியது கொட்டை எழுத்துக்களில் முன்பக்க முகப்புச் செய்தியாக!

எழுதியது மட்டுமல்ல தந்தை செல்வாவை கிண்டல் செய்த கார்ட்டூன்களும் போட்டு மகிழ்ந்தது!

ஆனால் தானே கக்கியதை இப்போது மீண்டும் விழுங்கியிருக்கிறது அந்தப் பத்திரிகை;

ஆம், 31-3-72 இதழின் முன்பக்க முதல் செய்தியாக "முதல்வர் கருணாநிதியும் செல்வநாயகமும் சேர்ந்து இலங்கைக்கு எதிராக சதியா? — பிரதம மந்திரி சிறிமாவோ இந்திரா காந்தியிடம் கேள்வி — இலங்கை தமிழ்ப் பகுதிகளை தமிழகத்துடன் சேர்த்து தனிநாடாக்கப் பேச்சாம் — என்ற தலைப்புடன் ஒரு செய்தியைப் பிரசுரித்திருந்தது!

இந்தச் செய்தி சரியா பிழையா என்பதை ஆராய்வதல்ல என்னுடைய நோக்கம்! குறிப்பிட்ட தினசரியின் செய்தி முரண்பாடுகளையும் பத்திரிகா தர்மங்களையும் கட்டிக் காட்டவே இங்கு முற்படுகிறேன்:

கருணாநிதி கையை விரித்தார் என்று எழுதிய அதே பத்திரிகை ஆசிரியர் இப்போது 'கருணாநிதி செல்வாவுடன் சேர்ந்து தனித் தமிழ்நாடு அமைத்திட சதி செய்தார்' என்று எழுதியிருக்கிறார் என்றால் — பொதுமக்களை வெறும் முட்டாள்கள் என்று அவர் கருதுகிறாரா அல்லது தன்னை ஒரு முட்டாள் என்று சுயவிளம்பரப் படுத்துகிறாரா?

## கோவை-மகேசன்

ஒரே பத்திரிகை இப்படிப் பட்ட ஒன்றுக்கொன்று முரண்பட்ட பாரதூரமான செய்திகளைப் பிரசுரிப்பதால் — பத்திரிகை புனைகதையே பொதுமக்கள் நம்ப மறுக்கும் ஒரு நிலை ஏற்பட்டுவிடக்கூடுமோ என்று அஞ்சுகிறேன்;

குறிப்பிட்ட தினசரியின் "சதி" செய்தி பற்றி என்னால் ஒன்றுமட்டும் கூறமுடியும். எங்கள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் 'சதிகள்' எதற்கும் இடம் கிடையாது; நாங்கள் காந்திய வழியில் — அஹிம்சைப் பாதையில் — நடப்பவர்கள். எங்கள் கோரிக்கை வெட்ட வெளிச்சமானது. தந்தை செல்வா அறிவித்திருந்தது போல — எந்த இயக்கத்தை நாம் தொடங்கினாலும் அதைப் பகிரங்கமாக அறிவித்துவிட்டுத்தான் செய்வோமே தவிர இரகசியமாக செய்பவர்கள் அல்லர் நாம்! எங்கள் ஈழத் தமிழ் பிரதேசத்தில், தமிழ் இனத்தின் தன்னாட்சியை நிலைநாட்டுவதொன்றே எங்கள் குறிக்கோள் என்பதை ஒளிவு மறைவு இன்றி அறிவித்து இருக்கிறோம் —

எங்களை வைத்துக்கொண்டு யாராவது சுற்றுமாற்று செய்திகளை — கயிறுதிரிப்புச் செய்திகளை வெளியிட்டு தங்கள் பத்திரிகை விற்பனையைப் பெருக்கிக்கொள்ள முயற்சிக்கிறார்கள் என்றால் நாம் அதற்கு என்ன செய்ய முடியும்?

O O O

அன்புக்குரிய வாசகர்களே சுற்றுப்பயணத்தைப் பற்றி அருமை ஏதேதோவெல்லாம் எழுதிக் கொண்டிருக்கிறேன் என்கிறீர்களா? என்ன செய்வது? எங்கள் சுற்றுப்பயணத்துடன் சம்பந்தப்பட்டதாக மேற்படி விஷயம் இருந்ததால் அதுபற்றி சற்று விரிவாக எழுதவேண்டியிருந்தது.

பெப்ரவரி 19ம் நாள் பலாலியிலிருந்து தந்தை செல்வா பொதுச்செயலாளர் அமிர்தலிங்கம் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், ஆகியோர் திருச்சிக்கு செல்வதாக முடிவு செய்யப்பட்டு இருந்தது என்று கூறியிருந்தேன் அல்லவா?

தந்தைக்கும், அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கும் ஏற்கனவே விமான டிக்கெட்டுக்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

சில பல காரணங்களால் நானும் உடன் செல்லும் வாய்ப்புக்கிடைக்குமா என்பது இறுதிவரை கேள்விக் குறியாகவே இருந்து வந்தது. — அதனால் எனது பிரயாணத்துக்கான விமான சீட் பதிவு செய்யப் படாமலே யிருந்தது.

பெப்ரவரி 18ம் திகதி மாலை 4 மணியளவில்தான் செல்வா அவர்களுடன் நானும் உடன் செல்வது என்பது நிச்சயமாயிற்று; உடனடியாக விமான நிலையத்துக்கு தொடர்பு கொண்டோம்;

"வெரி ஸாரி...தாலை சீட் கிடையாது" என்று பதில் வந்தது! ஒரு சீட் எப்படியாவது எடுத்துவிட என்மீது அக்கறையுள்ளவர்களில் ஒருவரான (செனட்டர்) நடராசா எவ்வளவோ முயன்றுபார்த்தார்; பலன் பூஜ்யம்தான்.

உள்ளம் உடனடியாகச் சோர்ந்துபோய் விட்டாலும் என் அந்தராத்மா மட்டும் எப்படியாவது ஒருசீட் கிடைத்தே தீரும் என்பதை சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தது!

ஏனெனில் நல்லெண்ணத்துடன் — புனிதமான நோக்கத்துடன் செய்யப்படும் காரியங்களுக்கு யார் என்ன இடையூறுகளும் முட்டுக்கட்டை

(8ம் பக்கம் பார்க்க)

---

# உழைப்பாளி நையாண்டிக்குரியவனா?

## கனகாம்பிகைக் குளத்தில் நடந்த காட்டுதர்பார்!

கிளிநொச்சி கனகாம்பிகைகுள மேட்டுப் பயிர்ச்செய்கைத் திட்டத்தில் 26.3.72 சனிக்கிழமை காலை பத்து மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்ற கூட்டமொன்றின் நடைமுறை விளக்கம்:

அன்றுகாலே அறிவித்தலை ஏற்று திட்டத்தின் விவசாயிகள், திட்டப்பணிமனை மண்டபத்தில் கூடிவிட்டார்கள்: கமக் காணி அதிகாரி மக்பூல், நீர்ப்பாசனப் பொறியியலாளர் கூடப்பணியாற்றும் கங்காணிப்பாளர், எழுத்தர் போன்ற இரு உத்தியோகத்தர்கள் இப்படியொரு அதிகாரக் கூட்டம் மக்கள் முன்னிலையில் கைதாங்கிக்கதிரைகளில் அமர்ந்திருக்கிறது.

விவசாயிகள் தங்கள் உழைப்பையே மூலதனமாக்கி, விளைச்சல் பெருக்கி உழைக்காத உலுத்தர்க்கும் உண்ணக்கொடுப்போர் தங்கள் குறைகளை எடுத்துக்கூற என்று ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் அது.

திட்டத்தின் விவசாயி திரு: நடராசா என்றொருவர் திட்டத்தின் நீர்ப்பாய்ச்சல் பற்றியும், திருத்தங்கள் பற்றியும், செய்யவேண்டிய வேலைகள் பற்றியும் எடுத்துரைத்துக்கொண்டிருந்தார். கனகாம்பிகை குளத்தின் அதிமுக்கிய வேலையொன்றை பலநாள் முறையிட்டும் குளத்தின் பொறியியல் பகுதி கவனிக்காததால் அரசாங்க அதிபருக்கு எழுதிய பின்பே அவ்வேலை நடைபெற்றதென்று கூறினார். பொறியியற்பகுதிப் பொறுப்பாளருக்குப் புரியவைக்கவேண்டுமென்பதற்காக.

பொறியியலாளருக்குப் பொத்தென்று வந்துவிட்டது கோபம்: கண்ணுடியை மேலே உயர்த்தினார், மேல்சட்டையைக் குலுக்கினார், கதிரையை அசைத்தார் சினம் அடக்கவில்லை சீறினார் பொங்கினார் ஆங்கிலத்தில் அழகு நொன்ஸென்ஸ் ரோக் (Nonsense talk) என்று கடுமையாக உறுமினார்;

உணர்ச்சியுள்ள வாலிபர்கள் பலர் இருந்தார்கள்; சாவம்வரும் கதை புரியும் என்று பொறுத்தனர் போலும் பொறியியலாளர்-பொறுமையாக விடயங்களைக் கேட்க வேண்டியவர் கேட்ட விடயங்களைக் கிரகித்து வழிமுறை சொல்லித் துணைபோக வேண்டியவர் அன்று தனது பட்டத்தின் கற்பனை முதன்மைத்துவத்தை எண்ணி இறுமாப்புக் கொண்டுவிட்டார் போலும்:

உழைக்கின்ற விவசாயி அதிகாரியின் வேலையாள் அல்ல என்பதை அதிகாரபீடம் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கவேண்டும்: உழைப்பவனுக்கு ஆலோசனை வழங்கி உழைப்பவனின் உழைப்பையே ஊதியமாகக் கொடுத்து அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் உழைப்பவனை அடக்கி, அடிபணியவைக்க அதிகாரியின் அந்தஸ்து ஆசைப்பட்டுவிடக்கூடாது. எட்டி உதைக்கலாம் என்று எண்ணினால் அந்த எண்ணம் செயலாக முன்பே அந்த எண்ணத்தைப் பொடியாக்கிவிட செய்யும் மினகாரர்களும் அங்கு இருக்கிறார்கள்; இதைப் பசளையாக்கி விடக்கூடியதுடிப்பும், துணிச்சலும் மிகுந்த வாலிபர்கள் பலர் இருக்கிறார்கள்;

தொடர்கிறது கூட்டம். பத்தாயிரம் மிகைத் தண்ணீர் கனை நாட்டி அந்த மண்ணிலேயே தன் எதிர்காலத்தை ஒப்படைத்துவிட்டிருக்கும் இளைஞனொருவன் எழுந்து பேசுகிறான்:-

'தண்ணீரைக் கனகாம்பிகை குளத்திலிருந்து காலை நாலு மணி அல்லது ஐந்து மணிக்குத் திறக்க ஏற்பாடு செய்தீர்களானால் வெயில் வருமுன்பு கன்றுகளுக்கு நீர்ப்பாய்ச்சுதல் இலகுவாக இருக்கும்.'

இது அவனின் கட்டளை அல்ல கருத்து மட்டும்தான்; திட்டத்தின் சின்ன அதிகாரி தியாகராசாவால் இதைப் பொறுக்க முடியவில்லை.

ஓவசியர் தியாகராசா: 'அந்த ஆலைக்காட்டுக்குள்ள நீயே போய் தண்ணி திறக்கிறது.'

இளைஞன்: 'அதற்கென்று ஒரு ஆள் நியமிக்கப்பட்டுள்ளாரல்லவா.'

கமக் காணி அதிகாரி மக்பூல்: (உருத்திரமூர்த்தியாகிறார் —நெற்றிக் கண்ணைத் திறக்க நினைத்தார் போலும்) 'ஏன் நீ இந்தக் கதிரைகளில் வந்திருந்தான்' என்று தனது கதிரையையும் பொறியியலாளரின் கதிரையையும் காட்டுகிறார்; எங்களுக்குத் தெரியும் எல்லாம் நீ பேசக்கூடாது என்று இளைஞனைப் பார்த்துச் சொல்லிப் பேசுகிறார். [illegible] களின் முறையீடுகள் கேட்கப்படுவதற்குப் பதிலாக அதிகாரிகளின் ஆணவம் அங்கு ஆட்சி செய்தது;

கதிரைகள் யாருக்கும் நிரந்தரமானவைகள் அல்ல— அதே கதிரைகளிடப் பலம் வாய்ந்த கதிரைகளில் அந்த இளைஞனோ அவனோடு சேர்ந்த உழைப்பாள இளைஞன் வேறொருவனோ உட்கார்ந்து விடலாம். கதிரைகளை இலட்சிய வேட்கையுள்ள இளைஞர்கள் கனவு காணவில்லை; உழைப்பாலுயர்ந்த இலட்சிய புதியவை உருவாக்கி அதன் பிரஜைகளாக இருக்கத்தான் விரும்புகிறார்கள்.

கதிரைகள் தற்காலிகமானவை என்று அதிகாரிகள் உணர்ந்து செயற்படவேண்டும். மக்களின் உள்ளங்களை வேண்டுமானால் நிரந்தரக் கதிரையாக்கிக்கொள்ள உழைத்தால் வெற்றிபெறலாம். மரக் கதிரைகளில் மனிதர்கள் மாறி மாறி உட்கார்ந்துவிட்டுப் போய்விட்டார்கள். இவர் இருந்த வரலாறு இல்லாமலே போய்விட்டார்கள்; இப்படி ஒரு பரிதாபகரமான வரலாறுதான் அதிகார வரலாறு என்பதை மறந்துவிடக்கூடாது;

உழைப்பவன் தன்னை தாங்கப் போகின்ற நாளை உலகத்தை நையாண்டி பண்ணினீர்களானால் எருமைத் தோல் படைத்த அதிகாரிகள் யாராக இருந்தாலும் உழைக்கும் சக்தி உங்களைத் தண்டித்தே தீரும்:

—முத்து சிவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் என்டடெயின்ம்மென்ட்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கிறது

2வது வாரம் செண்ட்ரல் (மருதானை) ஜெஸிமா (கிராண்ட்பாஸ்) ராணி (யாழ்நகர்)



சிவாஜிகணேசன், ஜெயலலிதா, பாலாஜி, சந்திரபாபு, சுந்தரராஜன், ரங்காராவ், நாகையா, ராகவன், பண்டரிபாய், மனோகர்,

நடிக்கும் சுஜாத்தாவின்! ராஜா (ஈஸ்மென் கலர்)

4வது வாரம் காட்சியளிக்கிறது பிளாசா (வெள்ளவத்தை)



சிவாஜி சௌகார்ஜானகி நம்பியார் எஸ். வி. சுப்பையா —நடித்த— காவல் தெய்வம்

8வது ஜனத்திரள் வாரம் கெப்பிட்டல் (கொழும்பு) விஜயா (மட்டுநகர்) வெலிங்டன் (யாழ்நகர்)



எம். ஜி. ஆர், பத்மினி, மஞ்சுளா, —நடித்த— ரிக்ஷாக்காரன்

புத்தாண்டு வெளியீடு! புதன் 12ந் திகதி பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்)

சிவாஜி லக்சுமி முத்துராமன் நிர்மலா நாகேஷ் குமாரிசச்சு நம்பியார் —நடித்த— தங்கைக்காக

புத்தாண்டு வெளியீடு 12ந் திகதி புதன்கிழமை முதல் செல்லமகால் மற்றும் சிலோன் தியேட்டஸ்சாரின் திரைகளில்

ஜெமினிகணேசன், ராஜ்ஸ்ரீ, நாகேஷ், மற்றும் பலர் நடித்த

# பத்தாம்பசலி

கதை—வசனம்—டைரக்ஷன்:— கே. பாலசந்தர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1972-ம் வருடம் ஏப்ரில் மாதம் 9-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது. — ஆசிரியர் கோவை மகேசன்.